RNI No.APTAM/2021/80590

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2026

விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:6, Issue:04, Pages:56
November-2026, Price Rs.20/-



சுபாம் ஹிரண்ய ப்ராகாராம் சமுத்ரதனயாம் ஜயாம் ।
நமாமி மங்களாம் தேவீம் ஸர்வோபத்ரவ வாரிணீம் ।।









திருமலையப்ப
ஸ்வாமிக்கு
15-09-2026 முதல் 23-09-2026
வரை மாடவீதிகளில் நடைபெற்ற
வருடாந்திர பிரம்மோத்ஸவத்தின்
போது பல்வேறு
கலை நிகழ்ச்சிகளில்
பங்கு கொண்ட
கலைக்குழுவினர்















யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவத3ந்த்யவிபச்சித:।
வேத3 வாத3ரதா: பார்த2 நாந்யத3 ஸ்தீதி வாதி3ந:।।
காமாத்மாந: ஸ்வர்க3 பரா ஜந்மகர்மப2லப்ரத3ாம்।
க்ரியாவிசேஷப3 ஹுலாம் போ3காை3 ச்வர்யக3திம் ப்ரதி।।
போ4காை3 ச்வர்யப்ரஸக்தாநாம் தயாபஹ்ருதசேதஸாம்।
வ்யவஸாயாத்மிகா பு3த்3தி4: ஸமாதௌ4 ந விதீ4யதே।।

அர்ஜுனா! போகங்களில் மூழ்கியவர்களும், சுவர்க்கமே மேலானது என்று நினைப்பவர்களும், கர்மங்களின் பயன்களைப் புகழ்ந்துரைக்கும் வேதவாக்கியங்கள் மீது பிரியம் வைக்கும் அறிவிலிகள், கர்மங்களின் பயனான பிறவியை அளிக்கின்ற போகங்கள் மற்றும் செல்வங்கள் பெறுவதற்கு எந்தப் பேச்சை எடுத்துப் பேசுகிறார்களோ, அந்தப் பேச்சினால் மனம் அபகரிக்கப்பட்டு போகத்திலும் செல்வத்திலும் மிகுந்த பற்றுள்ளவர்களுக்கு பரமாத்மாவிடம் நிச்சயமான கருத்துள்ள புத்தி நிலைபெற்றிருப்பதில்லை.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–42,43,44*



***உலகறிய மலிபுகழ்க்கார்த் திகைமா தத்தில்***
***உரோகிணிநா ளுறந்தைவளம் பதியிற் றோன்றித்***
***தலமளந்த தென்னரங்கர் பாலு லோக***
***சாரங்க மாமுனிதோ டனிலே வந்து***
***பலமறையின் பொருளாற்பாண் பெருமா ளேநீ***
***பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த***
***சொலவமல னாதிபிரான் பத்துப் பாட்டுஞ்***
***சோராம லெனக்கருள்செய் துலங்க நீயே.***

திருப்பாணாழ்வாரே! நிறைந்த புகழையுடைய கார்த்திகை மாதத்தில், ரோகிணித் திருநட்சத்திரத்தில், உறையூர் எனும் திவ்ய தேசத்தில் அவதரித்து, திரிவிக்ரமாவதாரத்தில் பூமியை அளந்த அழகிய ஸ்ரீரங்கநாதன் அருகில், லோகஸாரங்க முனிவரின் தோள்மீது எழுந்தருளி, பல வேதாந்தங்களின் ஸாரமாக ஸ்ரீரங்கநாதனுடைய திருவடி முதல் திருமுடிவரை நீ பாடி உலகுக்கு அருளிய "அமலனாதிபிரான்" என்று தொடங்கும் பத்துப் பாசுரங்களையும் மறவாமல் விளங்கும்படி நீ எனக்கு அருள் புரிவாயாக.

*–ஸ்ரீ தேசிகப்பிரபந்தம்.*





# மலையப்பன் சேவையில் மலர்கள்






## புஷ்ப கைங்கர்யம்

இயற்கை அன்னையின் அற்புதமான படைப்பே மலர்கள். அம்மலர்களால் சூழப்பட்டதே திருவேங்கடம். *"சிந்து பூ மகிழும் திருவேங்கடம்"* என்ற நம்மாழ்வார் பாசுரத்திற்கிணங்க, இராமானுஜரின் கட்டளையின்படி அனந்தாழ்வான் ஏரியை வெட்டி, மலர்த்தோட்டம் அமைத்து திருவேங்கடமுடையானுக்கு புஷ்பக் கைங்கர்யம் செய்தார். திருவேங்கடமுடையானும் தாயாருடன் அந்த நந்தவனத்திற்கு வருகை தந்து திருவிளையாடல் புரிந்ததும் அனைவரும் அறிந்ததே. திருமலையில் மலரும் மலர்கள் அனைத்தும் திருவேங்கடமுடையானின் சேவைக்கே என்ற எண்ணத்தில் திருமலையில் மகளிர் தம் தலையில் மலர் அணிவதைக் கூடத் தவிர்க்கின்றனர்.

## புஷ்ப யாகம்

யாகத்தால் ஆராதிக்கப்படக் கூடியவன் மஹாவிஷ்ணு. யாகத்தினுடைய பயனை அருளி, யாகத்தை அனுபவித்து அதனால் கொடுக்க வேண்டிய பலன்களை கொடுக்கக் கூடியவன். ஸ்ரீமந்நாராயணன் இக்கலியுகத்தில் திருவேங்கடத்தில் திருவேங்கடமுடையானாக இந்த யாகத்தை ஏற்றுக்கொண்டு, அதில் நாம் செய்த தவறுகளை, குறைகளைப் போக்கி அனுக்ரஹம் பண்ணுகிறான்.

இயற்கையின் சீற்றத்தினாலும், நாம் செய்யும் பலவித அபசாரங்களினாலும் பூமா தேவி சீற்றம் கொள்கிறாள், வருந்துகிறாள். அவள் வருத்தத்தையும், சீற்றத்தையும் போக்க பிராயசித்தமாக பிரம்மோத்ஸவம் முடிந்த பின்னர் புஷ்ப யாகம் செய்யப்பட்டு வருகிறது. புஷ்பயாகம் என்றால் மலர்களால் யாகம் நடத்தப்படுவது. கூடை கூடையாக அனைத்து விதமான மலர்களை வேத மந்திரங்கள் ஒலிக்க ஸ்வாமிக்கு பாதாதி கேசம் வரை சேர்த்துத் துதிப்பர். *"தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது"* இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் புகுதருவான் நின்றனவும் தூசாகும்.

இவ்வருடம் இரண்டு பிரம்மோத்ஸவங்கள் திருவேங்கடமுடையானுக்கு நடந்து முடிந்தன. இம்மாதம் திருவேங்கடமுடையானுக்கு புஷ்பயாகம் நடைபெறும். அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு நாம் செய்த பாபங்களைப் போக்கிக் கொள்வோம்.

திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம் 16-11-2026

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2026

மலர் 06 இதழ் 04

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| மரபைக் காப்பாற்றும் தீபாவளி பண்டிகை -நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். | 7 |
| மரணமிலா வாழ்வு தரும் மலையப்பன் -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 10 |
| ஸ்ரீசடாரி சாற்றப்படும் வேலனின் சந்நிதி -திரு. சதா. ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம். | 13 |
| வில்லிபாரதத்தில் பகவத் கீதை -பேராசிரியர் ஜி. நரசிம்மன், அனந்தபுரம். | 14 |
| திருவேங்கடவனின் தயை மழை -திரு. பொ. பாலாஜிகணேஷ், சிதம்பரம். | 18 |
| ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும் - திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. | 20 |
| காரிருள் நீக்கிடும் கார்த்திகை -திருமதி வஸந்தா வேணுகோபால், சென்னை. | 23 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர். | 25 |
| திக்கெங்கும் தரிசிப்போம் திருவேங்கடவனை - திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி. | 31 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருப்பதரியாச்ரமம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 36 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்: ஸ்ரீபராசர பட்டர் -ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை. | 40 |
| ஆரோக்கியம் அருளிடும் ஸ்ரீதன்வந்திரி - ஆயுர்வேத சிறப்பு மருத்துவர் டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட், கோவை. | 43 |
| நீதிக்கதை : கர்ம வினை! -திரு. இரா.அருண்குமார், புதுச்சேரி. | 47 |
| ராசிபலன்கள் : நவம்பர் 2026 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | 49 |
| சித்திரக்கதை : கலிதோஷம் நீங்கிட! | 52 |


அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீதனலக்ஷ்மித் தாயார் (சித்திரம்)

பின்னட்டை : ஸ்ரீமஹாவிஷ்ணு (சித்திரம்)



சிறப்பு ஆசிரியர் :
திரு. முத்தாட ரவிச்சந்திரா, ஐ.ஏ.எஸ்., செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

வெளியீட்டாளர்-ஆசிரியர்,
பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி., பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி., துணை செயலாட்சித் தலைவர் தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம், தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri_helpdesk@tirumala.org


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்



# குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று

குழந்தைப் பருவம் என்பது வாழ்க்கையின் முதற் காலகட்டம் ஆகும். ஆட்டம் பாட்டங்களுக்கும், பாசத்திற்கும் பணிவிற்கும், நட்பிற்கும் நடத்தைக்கும், கள்ளங்கபடமற்ற எண்ணத்திற்கும், செயலிற்கும் இதுவே முதல்படி. குழந்தைப் பருவம் மிகவும் மென்மை ஆனது. தெய்வம் அனைவரிடமும் தயாகுணம் காட்டுவது போல குழந்தையின் குணமும் அனைவரிடமும் தூய்மையான அன்புடையதாக விளங்குகிறது. இது எல்லையற்ற பரவச உணர்வுகளை அள்ளி வழங்கும் இயற்கையான, விலைமதிப்பற்ற வரம்; தேனினும் இனிய வாழ்வின் நற்கனி. குழந்தைப் பருவமே எதிர்காலத்திற்கான அடித்தளம். உடலும் மனமும் வியக்கத்தக்க வகையில் மலர்ந்து வளரும் பருவம்; கற்பனைகளுக்கும் கனவுகளுக்கும் அதுவே உறைவிடம். முற்றிலும் பிறரையே சார்ந்திருக்கும் நிலையாகத் தொடங்கி, முழுமையான சுதந்திரத்தை நாடும் திசையை நோக்கி அது வளர்கிறது. அதனால்தான் குழந்தைகளை விளையாட விட வேண்டும். குழந்தைகள் அருகிலுள்ள ஏதேனும் ஒரு பூங்காவிற்கோ, விளையாட்டு மைதானத்திற்கோ சென்று, அங்கு தமக்காக அமைக்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களுடன் மகிழ்ச்சியாக ஆடிப்பாட வேண்டும். மகாகவி பாரதியார் எழுதிய புகழ்பெற்ற "பாப்பா பாட்டு" இதனைத்தான் குறிப்பிடுகிறது.

*ஓடி விளையாடு பாப்பா – நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!*
*கூடிவிளையாடு பாப்பா – ஒரு குழந்தையை வையாதே பாப்பா!*

குழந்தைகள் விளையாடும்போது பெரியவர்கள் அவர்களைக் கட்டுப்படுத்துதல் கூடாது. நிம்மதியாக, சுதந்திரமாக விளையாடும் விளையாட்டுகளின் மூலம் குழந்தைகளின் சுய சிந்தனை, கற்பனைத்திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவை மேம்படும். கட்டுப்பாடற்ற சுதந்திர விளையாட்டுக்கள் குழந்தைகளிடையே தன்னம்பிக்கையை ஊட்டுகின்றன; அவர்களின் சிந்தனைகளில் கவனம் செலுத்த வைக்கின்றன; புதிய அறிவைக் கற்றுக்கொள்வதில் கவனத்தைத் திருப்புகின்றன. குழந்தைகளுக்கு அவர்களின் சுதந்திரமான பரிசோதனைகளுக்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். தங்களைத் தாங்களே சுயபரிசீலனை செய்துகொள்ள அனுமதிக்க வேண்டும். சுயமாக மன உறுதியையும் சமநிலையையும் பெறுவதற்கு விளையாட்டுகள் பெரிதும் உதவுகின்றன. மகிழ்ச்சியாக விளையாடும் ஆட்டங்களுக்கு எந்தவித எதிர்பார்ப்புகளும் இருப்பதில்லை; அவை மன அழுத்தமற்றவை. உண்மையில், "நன்றாகச் செயல்பட வேண்டும்" என்ற எதிர்பார்ப்பு அழுத்தத்தால் சிலருக்குத் தன்னம்பிக்கை குறையக்கூடும். எனவே இத்தகைய விளையாட்டுகள் எந்தவித எதிர்பார்ப்புகளோ, பாசாங்குகளோ இன்றி இயல்பாகத் தொடர்கின்றன. கூடுதல் பாடநெறிச் செயல்பாடுகளின் மூலம் கற்றுக்கொள்வதை விட, சுதந்திரமான ஆட்டங்களில் உள்ளுணர்வு ஊக்கம் அதிகமாக இருக்கும். சுதந்திரமாக விளையாடுவதால் சுயமாக முடிவெடுக்கும் திறன் வளர்கிறது.

குழந்தைப் பருவம் விளையாட்டுப் பருவம்; ஆட்டம்பாட்டங்களுடன் மலர வேண்டிய வயது. விளையாடுதல் என்பது படைப்பில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் மிக இயல்பான குணம். இயற்கையின் மடியில் வளரும் குழந்தைகள் விளையாடும் விளையாட்டுகள், அந்த இயற்கையோடு இயைந்த ஒரு பகுதியாகவே இருக்கின்றன. இயற்கையில் கிடைக்கும் ஒவ்வொரு பொருளுமே குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருளாகிவிடும். புளியங்கொட்டைகள், கூழாங்கற்கள், பூக்கள், மரக்கட்டைகள், மணல், களிமண் என அனைத்துமே குழந்தைகளின் விளையாட்டுகளில் இடம்பிடிக்கின்றன. குழந்தைகள் விளையாடும் விளையாட்டுகள் ஒரு தேசத்தின் பண்பாட்டுச் செல்வத்தின் விலைமதிப்பற்ற அங்கமாகின்றன.

குழந்தைப் பருவத்தில் ஆடிய ஆட்டங்கள், பாடிய பாடல்கள், கொண்ட நட்புகள், அனுபவித்த சுதந்திரம் – இவை அனைத்துமே பள்ளிப்பாடத்தில் ஒளித்து வைத்த மயில் இறகு போன்றவை. அது நிலவு போன்ற குளுமை நிறைந்தது. அதனால்தான் குழந்தைகளுக்கு விளையாட்டு மிக முக்கியமானது. இந்த உலகமே அவர்களுக்கு விளையாட்டு மைதானம்! இயற்கையிலுள்ள அனைத்துப் பொருட்களுமே அவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள்! விளையாடுவதும், விளையாடி களைத்துத் தூங்குவதும் குழந்தைப் பருவத்தின் வரங்கள்! இயல்புகள்! பேரழகுகள்! எனவே, இந்தக் கண்ணோட்டத்தோடு குழந்தைகளைத் திறந்தவெளியில் மகிழ்ச்சியாக, சுதந்திரமாக, உற்சாகமாக தங்களுக்குப் பிடித்த விளையாட்டுகளை விளையாட விடுவோம்! அவர்களை ஆரோக்கியமாக வளர விடுவோம்! குழந்தைகள் தான் ஒரு நாட்டின் எதிர்காலம்.

*குழந்தைகளை விளையாட விடுங்கள்! அவர்களை வளர விடுங்கள்!!*



# மரபைக் காப்பாற்றும் தீபாவளி பண்டிகை

நெய்வாசல் நெடுஞ்செழியன்,
சிதம்பரம், 94422 05862

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவளி மிகவும் முக்கியமானது. தீபாவளி என்றாலே பலருக்கும் நாவூறும். ஏனெனில் அன்றைய தினம் இனிப்பு வகைகளை பெரும்பாலான வீடுகளில் செய்வர். அதிகாலை எழுந்து எண்ணெய் ஸ்நானம் முடித்து, புத்தாடை அணிந்து, லட்சுமி தேவியை வரவேற்கும் விதமாக தீபங்கள் ஏற்றிப் பலகாரங்கள் செய்து நிவேதனமாக இனிப்பு பதார்த்தங்களை வைத்து வழிபடுவர். பின்னர் அக்கம் பக்கத்தில் உள்ளவர் களுக்குத் தருவர். சிலர் ஏழை பிள்ளை களுக்கு இனிப்புகளுடன் புத்தாடைகளையும் அன்பளிப்பாகத் தருவர். பின்னர் மகிழ்ச்சியைக் கொண்டாடும் விதமாக பட்டாசு வெடிப்பர்.

தீபாவளிஅல்லது தீப ஒளித்திருநாள் என்பது ஒரு பாரம்பரிய கலாச்சார விழா ஆகும். அந்தந்த கலாச்சாரத்திற்கேற்பவும், புராணப்படியும் ஒருநாள் தொடங்கி ஐந்து நாட்கள்வரை கொண்டாடப்படுகிறது. பெருமளவு மக்கள் ஒருநாள் கொண்டாட் டமாகவே வைத்துள்ளனர். ஐப்பசி மாதத்தில் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை மற்றும் அதற்கடுத்த சுக்கிலப்பிரதமை வரும் நாளில் கொண்டாடப்படுகிறது. பெரும்பாலான ஆண்டுகளில் தீபாவளி பண்டிகை ஐப்பசி மாத அமாவாசை நாளன்று கொண்டாடப்படுகிறது. விதிவிலக்காக சில ஆண்டுகளில் இது மாறுபடும்.

வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக நினைத்து கொண் டாடப்படும் தீபாவளி பண்டிகையை இந்துக்கள் தாண்டி சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள் என பல மதத்தினரும் கொண்டாடுகிறார்கள்.

அதனால் இது இந்தியாவைத்தாண்டி, நேபாளம், இலங்கை, மியான்மர், சிங்கப்பூர், மலேசியா மற்றும் பிஜி போன்ற வெளி நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. மலேசியா, சிங்கப்பூரில் வாழும் மக்கள் தீபாவளியை மிகவும் கோலாகலமாகவும் ஈடுபாட்டு டனும் கொண்டாடுகின்றனர். ஆனால், அனைத்திற் கும் ஆதியான நமது இந்தியாவில் தீபாவளி பண்டிகை மட்டுமல்ல அனைத்து பண்டிகைகளும் சம்பிரதாய விழாக்களாக மாறிவருகின்றன.

ஆதிகாலத்தில் மக்கள் தீபாவளி தினத்தில் வீடுகளைச் சுத்தம் செய்து லட்சுமிதேவியை வர வேற்று விளக்குகளால் அலங்கரித்தல், பலகாரங் கள் செய்து படையலிடுதல், பின்னர் பரிமாற்றம் செய்தல், ஆலய வழிபாடு மேற்கொள்ளுதல் போன்ற நிகழ்வுகளை கடைபிடித்து கொண்டாடி னார்கள். அப்படி அவர்கள் மகிழ்ச்சியுடன் கொண் டாடுவதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

### இந்து சமயத்தில் தீபாவளி

இந்து சமயத்தின்படி தீபாவளி கொண்டாட்டத் திற்கான வரலாறுகள் ஒன்றல்ல, இரண்டல்ல மூன்றாகக் கூறப்படுகின்றன. முதலாவது பதினான்கு வருடங்கள் வனவாசம் முடித்த இராமன்




தன் மனைவி சீதா, இளவல் லட்சுமணனுடன் நாடு திரும்பிய நாளை மக்கள் வீடுதோறும் விளக்கேற்றி அவர்களை வரவேற்று வழிபட்டதாக இராமாயணம் கூறுகின்றது.

அடுத்து இருபத்தோரு நாட்கள் கேதாரகௌரி விரதத்தை முடித்த சக்தியை, சிவபெருமான் தன்னில் ஒரு பாதியாக ஏற்றுக்கொண்டு அர்த்தநாரீசுவரராக உருவெடுத்த நாள். இதைக் கொண்டாடும் விதமாக மக்கள் விளக்கேற்றி வழிபட்டதாக கந்தபுராணம் கூறுகின்றது. மூன்றாவது திருமால் வராக அவதாரம் எடுத்தபோது அவரது மனைவியான நிலமகளுக்கு (பூமாதேவி) பவுமன் என்ற மகன் பிறந்திருந்தான்.

பவுமன் என்றால் அதிக பலம் பொருந்தியவன் என்று பொருள். வளர்ந்து இளைஞனான பவுமன் இன்றைய அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்த பிராக்சோதிகா என்ற நாட்டை ஆட்சி செய்து வந்தான். இவன் "தனக்கு யாராலும் மரணம் நேரக் கூடாது. தன் தாயால் மட்டுமே தனக்கு மரணம் நேர வேண்டும்" என்று வரம் பெற்றான். வரம் கிடைத்த மமதையில் அசுரனாக மாறி அனைவரையும் கொடுமைபடுத்தினான். அதனால், அவனுக்கு நரகாசுரன் என்ற பெயர் ஏற்பட்டது.

இவன் அதிதியின் காது வளையங்களைத் திருடியும், ஏராளமான பெண்களை சிறை பிடித்து துன்புறுத்தியும் வந்தான். அவனின் அநீதிகளை நிறுத்த வேண்டியும், அதற்காக அவனை அழிக்கவும் பலரும் ஸ்ரீகிருஷ்ணரிடம் முறையிடவே அதற்கான முயற்சியை கிருஷ்ணர் மேற்கொண்டார். ஸ்ரீகிருஷ்ண பகவான் பூமாதேவியின் அம்சமான சத்யபாமாவுடன் இணைந்து நரகாசுரன் மீது போர் தொடுத்தார். இறுதியில் சத்யபாமாவினால் நரகாசுரன் அழிக்கப்பட்டான்.

நரகாசுரனை அதிகாலையில் வதம் செய்து முடித்த கிருஷ்ண பகவான், எண்ணெய் தேய்த்து தலை முழுகினார். இறக்கும்போது அவன் தன்னுடைய கொடுமையிலிருந்து மீண்ட மக்கள் தான் இறந்த தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க எண்ணெய் குளியலுடன் புத்தாடை உடுத்தி தீபம் ஏற்றி மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகின்றது.

### தமிழகத்தில் தீபாவளி கொண்டாட்டம்

தமிழகத்தில் முதன்முதலாக தீபாவளி கொண்டாட்டம் தொடர் ஆண்டு 15ஆம் நூற்றாண்டு விஜயநகரப் பேரரசின் நாயக்க மன்னர்கள் ஆட்சி காலத்தில் கொண்டாடப்பட்ட



### தீபாவளி கொண்டாடிய முறை

**பல மதங்கள் விரும்பும் இந்தத் திருவிழாவான தீபாவளி முற்கால மக்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். தீபாவளி அன்று அனைவரும் அதிகாலை யில் எழுந்து, எண்ணெய்க் குளியல் (கங்கா குளியல்) செய்வர். புத்தாடை உடுத்தியும், இனிப்புக்களைப் பரிமாறிக்கொண்டும், பரிசுகள் தந்தும் மகிழ்வர். பெரியோரை வணங்கி வாழ்த்து பெறுவர். பட்டாசுகள் வெடித்து மகிழ்வர். அனைவரும் சேர்ந்து திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டு மகிழ்வர்.**

தற்கான சான்றுகள் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு செப்பேட்டில் இடம்பெற்றுள்ளது.

திருவாரூர் தியாகராஜ ஸ்வாமி கோயிலில் தஞ்சை மன்னர் கிருஷ்ணப்ப நாயக்கரால் தேர்த் திருவிழாவின்போது வான வேடிக்கையுடன் தீபாவளி கொண்டாடியதை அங்குள்ள சுவர் ஓவியங்கள் உணர்த்துகின்றன.

**சீக்கியர்களின் தீபாவளி**

1577ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்றுதான் சீக்கியர்களின் புனிதத்தலமான குருத்வாரா (பொற் கோயில்) கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டதால் அதை நினைவில் கொள்ளும் விதமாக சீக்கியர்கள் இந்நாளில் தீபமேற்றி கொண்டாடுகின்றனர் என்பர்.

**சமணர்களின் தீபாவளி**

சமணர்களின் முதல்குருவான வர்த்தமான மகாவீரர் வீடுபேறு அடைந்த தினம் ஒரு தீபாவளி நாளாகும். அதனடிப்படையில் அவரது நினைவை நினைவுகூறும் விதமாக சமணர்கள் தீபம் ஏற்றி வைத்து இந்நாளை வழிபடுவதாகக் கூறப்படுகிறது.

**பௌத்தத்தில் தீபாவளி**

பௌத்தமதத்தினர் இந்நாளை தீபதான உற்சவம் என்று குறிப்பிட்டு கொண்டாடுகின்றனர். வரலாற்றின்படி கௌதமபுத்தர் அரண்மனையில் இருந்து வெளியேறி போதி கயாவில் தங்கி மெய் ஞானம் பெற்ற பிறகு, அவரின் தந்தை சுத்தோதனர் மகனின் வருகைக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்.

தூதுவர்களை அனுப்பி அழைத்து வருமாறு பணிக்கிறார். அவர்கள் யாவரும் புத்தரின் சீடர்களா யினர். தொடர்ந்து மன்னர் பல தூதர்களை அனுப்பி யும் அவர்களும் பெருமானின் உண்மையை உணர்ந்து துறவிகள் ஆனார்கள்.

கடைசியாக, சுத்தோதனர் தனது மந்திரி காலோதயனை அனுப்பிவைத்தார். காலோதயன் பெருமானின் பாமர மாணவனாக மாறினாலும், புத்தரை மீண்டும் கபிலவஸ்துவிற்கு வரச் செய்தான். பெருமானும் அவருடைய மாணவர்களும் கபில வஸ்துவிற்கு விஜயம் செய்த நாளன்று, நகர மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து கொண்டாடினர்.

இந்த நாள் தான் ஐப்பசி மாத அமாவாசை. புத்தரின் திருவிஜயத்தை வழிபடுவதற்காக கபிலவஸ்துவின் மக்கள் தீபங்களை ஏற்றி வைத்து, சோதிப்பிரகாசத்தால் பூமியைத் தூயமாக்கியதால் அன்றைய தினம் "தீபதான உற்சவம்" என்றும், "தீபாவளி" என்றும் அழைக்கப்பட்டது.

அசோகர், மௌகளிப்புத்திரர் மற்றும் இந்திர குப்தர் ஆகியோரின் மேற்பார்வையில் மௌரியத் தலைநகர் பாடலிபுத்திரத்தின் "அசோகாராமம்" என்ற தனது மடாலயத்தில் தீபதான உற்சவத்தைக் கொண்டாடினார். இந்நிகழ்வு "சிதவிரகாதை" என்னும் நூலில் விவரிக்கப்பட்டு உள்ளது.

**கொண்டாடிய முறை**

இத்தனை சிறப்புமிக்க கலாச்சாரவிழாவை அதற்குரிய ஆதிகுடிகளான இந்துக்களாலேயே படிப்படியாக சீரழிவுக்குள்ளாக்கப்பட்டது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என மனநிலையை அவர்கள் மாற்றிக் கொண்டதால் தீபாவளி நாளில் புலால் உண்ணுவதும், ஆலயங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக புதிய சினிமாவை பார்க்கச் செல்வதும் அதிகரித்து வருகின்றது. இதனால் தீபாவளி மட்டுமின்றி அனைத்துப் பண்டிகைகள், வழிபாடுகள், உற்சவங்களின் பெருமையும் மேன்மையும் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

இந்துக்களைத்தாண்டி சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள் இன்றளவும் தங்களது பெருமையை விடாமல் கட்டிக் காப்பாற்றி இழுத்து வரும்போது இந்துக்கள் மட்டும் இதை கோட்டை விட்டு நிற்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு ஆன்மீக விழிப்புணர்வு படிப்படியாக குறைந்து வருகிறது.

ஊர் கோயில் திருவிழாவின்போது உழைத்துக் களைத்து அந்த களைப்பை போக்கிக் கொள்ளும் விதமாக விளம்பர பதாகைகள் வைத்து உற்சாகம் தேடிக்கொள்பவர்கள் அதைக் குறைத்து ஒவ்வொன் றின் தாத்பர்யத்தையும் உணர்ந்து பேணி, விழாக் களை அதற்கேயுரிய தாத்பரியத்துடன் கொண்டாட முயலுங்கள். இனியாவது யோசியுங்கள்.

*தீபத்தை ஏற்றி இருளை விலக்குவோம்!*
*மரபைப்பேணி மகிழ்ச்சியை நிலைநிறுத்துவோம்!!*

நவம்பர் மாதம் இலையுதிர் மற்றும் குளிர்காலத்திற்கு முந்தைய "சரத் ருது" எனப்படும் பருவம். இந்நாட்களில் வானம் மேகமின்றித் தெளிந்தும், வெயில் மிதமாகவும், இயற்கை குளிமையாகவும் இருக்கும். அருவிகளில் நீர் கொட்டும். பூக்கள் மலர்ந்து சிரிக்கும்.

திருமலையில் கண்ணுக்கு இனிய இயற்கையின் அழகையும், நீர்வீழ்ச்சிகளின் செழுமையையும் ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களில் மிக அழகாக வர்ணித்துள்ளனர்.

திருமழிசை ஆழ்வார், அருவிகளில் நீர் கொட்டும் அழகை வர்ணிக்கும்போது, உயர்ந்த மலைகளில் உள்ள அருவிகளில் பெருக்கெடுத்து ஓடும் தண்ணீர் பாறைகளின் மீது பாய்ந்து மோதி, நீர்த்துளிகள் சூரிய ஒளியில் முத்துக்களைப் போலச் சிதறி வீழ்வதை, *''கல்லருவி முத்துதிர''* என்று கவிநயத்தோடு அழகுபடப்பாடுவார்.

இந்த மாதத்தில் திருமலையப்பன் புஷ்பயாகம் (16.11.2026) நடைபெறும்.

*''சிந்து பூ மகிழும்''* என்று நம்மாழ்வார் வர்ணித்தபடி தாமரை, மல்லிகை, ரோஜா மற்றும் பல வண்ணப் பூக்களால் உற்சவ மூர்த்திகளுக்கு அலங்காரம் செய்யப்பட்டு, பூக்களையே யாகப் பொருளாகக் கொண்டு, பூச்சொரிந்து வழிபடப் படும். இத்தினத்தில் ஏழுமலையான் பூக்களால் பூத்துக்குலுங்கும் கோலத்தில் பக்தர்களுக்குக் காட்சியளிப்பார்.

அடுத்து கைசிக துவாதசியும் (21.11.2026) வருகிறது. அன்றைய தினம் நம்பாடுவான் மற்றும் கைசிக புராணத்தின் வரலாற்றை நினைவுகூர்ந்து, விடியற்காலையில் பெருமாளைத் தரிசித்து, கைசிக புராணக் கதை கேட்பது பெரும் புண்ணியத்தைத் தரும். கைசிக புராணம் திருமலையிலும் பாடப்படும். அடுத்து தீபம் (24.11.2026) வருகிறது.

*மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்*
*விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள்*
*தானாய்*

என்ற திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டக பாசுர வரிகளுக்கேற்ப திருமலையில் தீப உற்சவம் நடைபெறும். இந்த நாளுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. திருமங்கையாழ்வாரின் அவதார நாள்.

*மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்*
*கோன்*
*ஆறங்கம் கூற அவதரித்த வீறுடைய*
*கார்த்திகையில் கார்த்திகை நாள்*
*இன்றென்று காதலிப்பார்*
*வாய்த்த மலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து*

என்று திருமங்கை ஆழ்வார் அவதார நாளைக் கொண்டாடுகிறார் மணவாள மாமுனிகள் தமது உபதேசரத்தினமாலையில்.

நம்மாழ்வாரின் திருநாமங்களில் ஒன்று "மாறன்" (சடகோபன்) என்பதாகும். அவர் அருளிய திருவாய்மொழி எனப்படும் திராவிட வேதத்தை (தமிழ் மறை) போற்றி வணங்கும் மரபு உண்டு. அந்த வேதத்திற்கு ஆறு அங்கமாக ஆறு பிரபந்தங்களைப் பாடியருளினார் திருமங்கை ஆழ்வார்.



# மரணமிலா வாழ்வு தரும் மலையப்பன்

– பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி, 94434 39963

ஆறு என்றால் எண்ணிக்கை மட்டுமல்ல. வழி என்றும் ஒரு பொருள் உண்டு. நம்மாழ்வாரின் வேதத்துக்கு நிகரான நான்கு பிரபந்தங்களையும் புரிந்து கொள்வதற்கு, வழியாக, திருமங்கை ஆழ்வாரின் பிரபந்தம் இருக்கிறது. நாம் கார்த்திகை யில் தீபம் ஏற்றுகிறோம். அந்த தீப நாளில் தான் திருமங்கையாழ்வார் ஒரு தீபமாக அவதாரம் செய் தார். அவரை "கவிம் லோக திவாகரம்" என்பார்கள்.

தீபம் என்பது வழிகாட்டும். அவர் பாடிய பாசுரங்களும் தீபம் தான் என்பதைப் பின்வரும் தனியன் விளக்கும். நெஞ்சுக்கு இருள் கடி "தீபம்", அடங்கா நெடும் பிறவி நஞ்சுக்கு நல்லமுதம் தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கிலக்கியம் ஆரண சாரம், பரசமய பஞ்சுக்கு அனலின்பொறி, பரகாலன் பனுவல்களே. பரகாலன் பனுவல் சரணாகதியை வழியாகக் காட்டுகிறது. மனிதப் பிறவி நீங்க ஒரே வழி திருமலை அப்பனை சரணடைவதுதான்

அதைத்தான் நம்மாழ்வார், *''புகல் ஒன்றும் இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே''* என்று த்வய மந்திர அர்த்தத்தை எடுத் துரைத்தார். அந்த அர்த்தத்துக்கு விளக்கமாகவே, கார்த்திகை மாதத்தில் அவதரித்த திருமங்கை ஆழ்வார் திருமலையப்பனுக்கு மங்களாசாசனம் செய்தருளினார். அந்தப் பாசுரத்தில் ஒன்றை, இந்த கார்த்திகை மாதத்தில் நாம் அனுபவிப்போம்.

*மன்னா இம்மனிசப்பிறவியைநீக்கி,*
*தன்னாகித் தன்னின்னருள்செய்யும்தலைவன்,*
*மின்னார்முகில்சேர் திருவேங்கடம்மேய,*
*என்னானையென்னப்பன் என்னெஞ்சிலுளானே!*

இதன் பொருள் பார்ப்போம்.

**மனிசப்பிறவி நீக்கி :** அநித்தியமானதும், துன்பங்கள் நிறைந்ததுமான இந்த மனிதப் பிறவிப் பிணியை மாற்றி, என்னை உய்விப்பவன்.

**தன்னாகித் தன்னின் அருள் செய்யும் தலைவன்:** எங்களை ஆட்கொண்டு, தன்னுடைய தன்மையை எமக்கு வழங்கி, தன் திருவருளை முழுமையாகப் பொழியும் கருணைக் கடலாகிய தலைவன்.


**மின்னார் முகில் சேர் திருவேங்கடம் மேய:** மின்னல் வீசும் மேகங்கள் தவழும் அழகிய திருமலைத் திருப்பதியில் வீற்றிருக்கும் பெருமான்.

**என்னானை என் அப்பன் என் நெஞ்சிலுளானே:** யானையைப் போன்ற கம்பீரனும், என் தந்தையுமான அந்த எம்பெருமான் இப்போது என் நெஞ்சுக்கு உள்ளேயே நிரந்தரமாகக் குடியிருந்து அருளுகிறான் என்று ஆழ்வார் பரவசமடைகிறார்.

மனிதப் பிறப்பின் பந்தங்களைத் துறந்து, இறைவனின் திருவடிகளைப் பற்றுவதே பேறு என்ற ஆழ்வாரின் தீவிர பக்தி வெளிப்பாடு இப்பாசுரத்தில் பளிச்சிடுகிறது. *''என் ஆனை என் அப்பன்''* என்ற சொற்கள் இறைவனை வெறும் தலைவனாக மட்டுமின்றி, குடும்பத்தில் உள்ள உறவுமுறையாக வும், எல்லை அற்ற பலம் பொருந்திய யானையைப் போன்ற காப்பாளனாகவும் பாவித்து உரிமையோடு அழைக்கும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வை வெளிப்படுத்துகிறது.

மின்னல் மின்னும் மேகங்கள் சூழ்ந்த உயர்ந்த மலையான திருவேங்கடத்தின் இயற்கை அழகோடு, எம்பெருமானின் திருமேனி அழகும் மனத்தில் நிழலாடும். திருமலையப்பன் அவதார ரகசியம் ஒன்று உள்ளது. தன் அடியார்களைத் தேடிதான்


திருமலை திருப்பதி தேவஸ்தானம்



**வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு...**

உலகிலேயே விலை மதிப்பற்றது உயிர் மட்டும்தான். அந்த உயிரினைக் காத்திட பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வோம்!

- திருமலைக்குச் சொந்த வாகனத்தில் வரும் பக்தர்கள் கூடுமானவரை ஓட்டுனர்களுக்குப் போதிய ஓய்வினை அளித்திடுங்கள். வாகன ஓட்டுனர்களின் பாதுகாப்பே நமது பாதுகாப்பாகும்.
- மலைவழிப்பாதையில் வாகனங்களை ஓட்டும் போது கவனமாகச் செயல்படவும். பிற வாகனங் களை முந்திச் செல்லாதீர்கள்.
- அனைவரும் கட்டாயமாக சீட் பெல்டை அணிந்து கொண்டு பாதுகாப்பாக பயணம் செய்யுங்கள்.
- திருமலைக்கு இருச்சக்கர வாகனத்தில் வருபவர்கள் தலைக்கவசத்தை அணியுங்கள். தலைக்கவசமே உயிர் கவசமாகும்.

அவன் வைகுண்டத்திலிருந்து இறங்கி திருமலையில் வந்து நிற்கிறான். அவன் வந்த காரணமே பக்தர்களின் குறைகளைத் தீர்த்து அவர்களை ஆட்கொள்ளத் தானே. அப்படி தன் அடியாரைத் தேடித் திரிந்தவன் கலியனாக வந்து தன்னை உருகிப்பாடிய திருமங்கை ஆழ்வாரைக் கண்டு கொண்டான். தன் நெஞ்சில் வந்து அமர்ந்த ஆழ்வாரை இறைவன் ஒருபோதும் கைவிட்டுவிடுவானா?

*"என்னானை என் அப்பன் என் நெஞ்சிலுளானே"* என்று ஆழ்வார் தன்னை முற்றிலுமாக ஒப்படைத்த போது, எம்பெருமான் தாமே முன்வந்து அவரது நெஞ்சில் குடிபுகுந்து விட்டான். அடியாரைத் தன் நெஞ்சில் ஏந்திக்கொண்ட அந்தப் பெருமான், தன் பக்தனை எக்காலத்திலும் விட்டு விலக மாட்டான்; அவனது சம்சார பந்தத்தையும் அறுத்து முழுமையான பேரின்பத்தை வழங்குவான். "மன்னா" என்ற சொல் இந்த மானிடப் பிறவிக்குரிய ஒரு சிறப்புக் குறிப்பு (அடைமொழி) ஆகும்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில், *''மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்''* என்று பாடி உள்ளார். அதாவது, ஆகாயத்தில் தோன்றி மறையும் மின்னலைக் காட்டிலும் அதிவேகமாக அழியக் கூடியது இந்த மனித உடல். அத்தகைய அஸ்திரமான (நிலைநிற்காத) மனிதப் பிறவிக்கு உரிய இன்ப–துன்பக் குழப்பங்களில் இருந்தும், பிறப்பு–இறப்புச் சுழற்சியில் இருந்தும் என்னை முழுமையாக விடுவித்து, எம்பெருமான் தன் திருவடியில் சேர்த்துக் கொண்டான் என்று ஆழ்வார் வியக்கிறார். "தன்னாக்கி" என்ற சொல்லுக்கு இரண்டு அற்புதமான அர்த்தங்கள் கூறப்படுகின்றன.

ஒன்று, எம்பெருமான் தன்னைப்போலவே முழுமையான ஞானமும் ஆனந்தமும் (மலர்ந்த ஞானாநந்தங்கள்) உடையவனாக என்னை மாற்றினான் என்பது. மற்றொன்று, என்னை முழுமையாகத் தனக்கு அடிமையாக (சேஷபூதனாக) ஆக்கிக் கொண்டு அடிமைப்படுத்தினான் என்பதாகும்.

இறைவன் தன் தன்மையை அடியாருக்கும் வழங்கி மகிழும் பெருங்கருணையை இது காட்டுகிறது. "மின்னார் முகில்" என்ற அழகிய தொடருக்கு "பெருமாளும் பிராட்டி"யுமாக என்று வியாக்கியானத்தில் மிகச் சிறப்பான உவமை கூறப்பட்டுள்ளது.

மேகமானது (முகில்) கார்மேக வண்ணனான எம்பெருமானையும் (ஸ்ரீமந்நாராயணன்), அதில் மின்னும் மின்னல் கொடியானது திருமகளாகிய பிராட்டியாரையும் குறிக்கும்.

நீல நிற மேகத்தில் மின்னல் ஒளிர்ந்து தோன்றுவது போல, எம்பெருமானின் திருமார்பில் திருமகள் பிராட்டி நித்திய வாசம் செய்யும் அந்த திவ்ய தம்பதிகளின் இணைந்த காட்சியே, மின்னார் முகில் சேர் திருவேங்கட மலையாகும்.

இப்படிப்பட்ட பரம்பொருள், உலகத்திலுள்ள எட்டாத உயரத்தில் யாரோ ஒருவராக இல்லாமல், என்னை நாடி வந்து *"என் நெஞ்சிலே வந்து புகுந்து நிற்கிறான் காண்மின்''* என்று ஆழ்வார் உலகத்தாருக்குப் பெருமிதத்துடன் காட்டுகிறார்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையானின் அக்ஷர தீபிகை

ஸப்தகிரி



மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்து)ப் பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர்களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஸப்தகிரி குறித்துக் கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமியின் திருவருளைப் பெற வையுங்கள்.



# ஸ்ரீசடாரி சாற்றப்படும் வேலனின் சந்நிதி



**– திரு. சதா.ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம், 9443171383.**

உலகப் பிரசித்தி பெற்ற மகாமக தீர்த்தவாரி நடைபெறும் திருக்குளமான மகாமகக்குளம் அமையப்பெற்றுள்ள கோயில் மாநகரம், தஞ்சை மாவட்டத்தில் உள்ள கும்பகோணமாகும். இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீசோமகலாம்பிகை சமேத ஸ்ரீவியாழ சோமேஸ்வரரை வியாழ (குரு) பகவான் மற்றும் சந்திரன் (திங்கள்) பகவான் ஆகிய இரு கிரக தேவர்களும் வழிபட்டு பேறு பெற்றதால் இவ்வாலயம் ஸ்ரீவியாழ சோமேஸ்வரர் ஆலயம் என்றழைக்கப்படுகிறது.

## கோவிந்த நாமத்தை துதிப்போம்!

கலியுகத்தில் நாம ஸ்மரணை செய்வதே முக்தி அடைவதற்கான வழியாகும். "குறைவொன்றும் இல்லாத கோவிந்தா..." என்ற கோதை நாச்சியாரின் கூற்றின்படி "கோவிந்தா" என்ற பெயரைக் கூறினால் கோடி புண்ணியம்.

திருமலையில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் திருமலையில் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அனைவரையும் "கோவிந்தா" என்றே அழையுங்கள். இல்லங்களில் இருந்தாலும் "கோவிந்த நாம" பாராயணம் செய்தல் நன்று.

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!

இத்திருக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் கிழக்கு திசை நோக்கி தனிச் சந்நதியில் அருளும் ஸ்ரீவள்ளி, ஸ்ரீதேவசேனா தேவியருடன் அருள்மிகு ஸ்ரீஆறுமுகவேலவன் மயில் மேல் மிக அரிதான வகையில் பாதரக்ஷையுடன் அமர்ந்தத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். மேலும், அருளாளர் அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் பதிகத்தில் இம்முருகப்பெருமான் இடம் பெற்றுள்ளது கூடுதல் சிறப்பாகும்.

### வேலன் சந்நிதியில் சடாரி

ஸ்ரீவைணவ ஆலயங்களில் பக்தர்களுக்குச் சாற்றப்படும் சடாரி போல் இத்தல முருகப் பெருமானின் சந்நதியில் பிரதி மாதம் கார்த்திகை நட்சத்திர தினத்தில் பக்தர்களுக்கு சடாரி சாற்றப் படுவது குறிப்பிடத்தக்கதாகும் .

இது போல் தமிழகம் மற்றும் அதன் எல்லை பகுதிகளில் அமையப்பெற்றுள்ள நான்கு (சைவ) சிவாலயங்களில் மட்டும் சடாரி வைக்கப் படுகிறது என்பது கூடுதல் தகவலாகும்.

### அக்கோயில்கள்

காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீஏகாம்பரேஸ்வரர் கோயில், ஸ்ரீகாளஹஸ்தி கோயில், ஸ்ரீசுருட்டப் பள்ளி மற்றும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மகம் பிறந்த நல்லூர் ஆகிய சிவாலயங்களில் சடாரி சாற்றப்படுவது கூடுதல் சிறப்பாகும் .

இத்தலத்தில் அருளும் ஸ்ரீஆறுமுக வேலனை வணங்கி வழிபட நினைத்த காரியம் சித்தியாகும், தடைப்பட்ட காரியங்கள் வெற்றி அடையும் என்பது திண்ணமாகும்.

இந்திய இலக்கியங்களில் இராமாயணம், மகாபாரதம் எனும் இரு மிகப்பெரிய காவியங்கள் மிகப் பழமையானவை. இராமனின் புகழை இராமாயணமும், கண்ணனின் புகழை மகாபாரதமும் விளக்குவனவாக அமைந்துள்ளன. மகாபாரதத்தின் செம்பாகமான பகுதி குருக்ஷேத்திர போர்க்களம் ஆகும். அதன் மையப் பகுதியாக விளங்குவது பகவத் கீதையாகும். பகவத்கீதை பிரஸ்தானத் திரயத்தில் ஒன்றாகும். இதற்குப் பலரும் பல வகையான விளக்கங்களையும், மொழியாக்கங்களையும், உரைகளையும் அளித்துள்ளனர். இராமானுஜரும், ஆதிசங்கரரும் இதற்கு வேதாந்தமான விளக்க உரையை அளித்துள்ளனர்.

*ஸர்வோபநிஷதோ காவோ தோக்தா கோபால நந்தன: ।*
*பார்த்தோ வத்ஸ: ஸுதீர்போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத் ।।*

அனைத்து உபநிஷத்துக்களும் பசுக்களாகும். கிருஷ்ணன் பால் கறப்பவன். பார்த்தன் கன்று. பகவத்கீதை என்னும் அமிர்தம் ஒப்பற்ற பாலாகும். பேரறிஞர்கள் அதை அருந்துகின்றனர் எனக் கூறுகின்றது.

இந்த கீதையை முற்கால ஆசாரியர்கள் மட்டுமின்றி பிற்காலத்தில் வாழ்ந்து மறைந்த சான்றோர்களான இந்தியச் சிந்தனையாளர்கள் இதைத் தற்காலத்தில் கற்றுச் சிந்தித்து மக்களுக்கு எடுத்துரைத்துள்ளனர். பால கங்காதர திலகர் இயற்றிய 'கீதா ரகசியம்', அரவிந்தரின் 'கீதையின் கட்டுரைகள்' மற்றும் மகாத்மா காந்தியின் 'அனாசக்தியோக' ஆகிய நூல்கள் இந்த பகவத்கீதையின் வழி நூல்களாக அமைந்துள்ளன. மேலும், இது இந்தியத் தத்துவச் சிந்தனையை மேன்மேலும் வளர்த்து வருகின்றது.

### கீதையின் சிறப்புகள்

அனைத்துச் சாத்திரங்களில் கண்ட முடிவுகள் பகவத் கீதையில் நிறைந்து இருக்கின்றது. இது சாத்திரங்களின் கருவூலம் என்றால் மிகையாகாது. பகவத் கீதையைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் பிற சாத்திரங்களில் உள்ள தத்துவங்கள் எளிதில் புலனாகும். வியாச மகாபாரதத்தில், *''ஸர்வ ஸாஸ்த்ரே மயீ கீதா''* (பீஷ்ம பருவம் 43.2) எனக் கூறப்பட்டுள்ளது.



# வில்லி பாரதத்தில் பகவத் கீதை

**– பேராசிரியர் ஜி. நரசிம்மன்,**
**அனந்தபுரம், 9000127115**

சாத்திரங்கள் வேதங்களிலிருந்து தோன்றின. வேதங்கள் பிரம்மனின் திருமுகத்தில் இருந்து தோன்றின. அந்தப் பிரம்மனும் பகவானுடைய உந்தித் தாமரையிலிருந்து தோன்றினான். இவ்வாறு சாத்திரங்களுக்கும் பகவானுக்கும் இடைவெளி மிகுதியாகும். ஆனால், பகவத்கீதை பகவானுடைய முகத்தாமரையிலிருந்து நேரடியாக வெளிவந்தது. ஆகவே, சாத்திரங்களை விட பகவத்கீதை மிகவும் உயர்ந்ததாகும்.

கீதை கங்கையைக் காட்டிலும் சிறந்தது. கங்கையில் நீராடினால் முக்தி பெறலாம். ஆனால் பிறரைக் கரையேற்ற முடியாது. கீதையைக் கற்பதால் முக்தி பெறலாம். கீதையைக் கற்பவன் பிறரையும் கரையேற்றும் தகுதி படைத்தவன் ஆகிறான். கங்கை விஷ்ணுவின் பாதத்தில் தோன்றுகிறது. கீதை பகவானின் திருமுகத்திலிருந்து தோன்றியது.

காயத்திரி மந்திரத்தை விட கீதை சிறந்ததாகும். காயத்திரியை ஜபம் செய்தால் முக்தி கிடைக்கும். கீதையைப் பாராயணம் செய்தால் தானும் கரை ஏறலாம், பிறரையும் கரை ஏற்றலாம்.

வராக புராணத்தில் கீதையின் பெருமை இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

*கீதாச்ரயே ஹம் திஷ்டாமி கீதா மே சோத்தமம் க்ருஹம் ।*
*கீதா ஜ்ஞான முபாச்ரித்ய த்ரீன்லோகான் பாலயாம்யஹம் ।।*

"கீதையை நம்பி நான் வாழ்கிறேன். கீதையே என்னுடைய வீடாகும். கீதையின் ஞானத்தைப் பெற்று நான் மூவுலகங்களையும் காக்கிறேன்" எனக் கூறப்பட்டுள்ளது. பகவத் கீதையை முறையாகக் கேட்க வேண்டும், பாட வேண்டும், படித்தல் வேண்டும், கற்பிக்க வேண்டும், மனப்பாடம் செய்ய வேண்டும்.

*கீதா சுகீதா கர்த்தவ்யா கிமன்யை: சாஸ்திர விஸ்தரை: ।*
*யா ஸ்வயம் பத்மநாபஸ்ய முகபத்மாத் விநிஸ்ருதா ।।* – பீஷ்ம பருவம் 43.1

இந்தச் சுலோகத்தில் பத்மநாப எனும் சொல் கையாளப்பட்டுள்ளது. எல்லா சாத்திரங்களுக்கும் ஆணிவேராக விளங்குபவர் அந்தப் பிரம்ம தேவரே. பகவானின் உந்தித் தாமரையில் இருந்து உதித்தவர். அந்த பகவானுடைய திருவாயிலிருந்து உதித்தது கீதையாகும்.

## கீதையின் அமைப்பு

பகவத்கீதை 18 அத்தியாயங்களையும், 701 சுலோகங்களையும் கொண்டதாக அமைகின்றது. எம்பெருமான் கண்ணன் பேசியதாக 574 சுலோகங்களும், அர்ஜுனன் 85 சுலோகங்களையும், சஞ்சயன் 41 சுலோகங்களையும், திருதராட்டிரன் 1 சுலோகத்தையும் கூறியதாகக் கீதை அமைந்துள்ளது. கீதை ஞானத்தைப் போதிக்கின்றது. பிரபஞ்ச உணர்வுடன் தனிமனிதன் உணர்வை இணைப்பதே யோகம் எனலாம். பகவத்கீதையில் முதல் ஆறு அத்தியாயங்கள் கர்மயோகத்தையும், இரண்டாவது ஆறு அத்தியாயங்கள் பக்தியோகத்தையும், மூன்றாவது ஆறு அத்தியாயங்கள் ஞான யோகத்தையும் வெளிப்படுத்துகின்றன.

வைணவத்தில் தத், த்வம், அஸி எனும் முச் சொற்களால் வாக்கியம் அமைந்துள்ளது. த்வம்–நீ, தத்–அதுவாக, அஸி–இருக்கிறாய் என்பது அதன் பொருளாகும். ஜீவாத்மாவாகிய நீ பரமாத்மாவிற்கு அந்நியமானவன் அல்லன் என்பதே இதற்கு விளக்கமாகும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைவது பகவத்கீதை. பகவத்கீதையைத் திரிஷட்கம் என்பர்.

இதில் 18 அத்தியாயங்கள் உள்ளன. 1–6 அத்தியாயங்கள் த்வம்–நீ மிகவும் விரிவாக விளக்குகின்றது. ஜீவன், அவனின் குறைபாடு, அவன் அடைய வேண்டிய இறை நிலை, அதை அடையச் செய்யும் முயற்சி ஆகியனவற்றை விளக்குகின்றன. 7–12 அத்தியாயங்கள் பரதத்துவமாகிய பரமாத்மாவை விளக்குகின்றன. மேலும், பரமாத்மா யாவரும் யாவையுமாய் இருத்தல் நிலையையும் விளக்குகின்றன. 13–18 அத்தியாயங்கள் பரமாத்மா ஜீவாத்மாவின் இணக்கத்தைக் கூறுகிறது.

## வில்லி பாரதத்தில் பகவத் கீதை

வில்லிபுத்தூர் ஆழ்வார் தமிழ்ப் பாரதத்தில் பீஷ்ம பருவத்தில் இரண்டாம் பாடலில் இருந்து ஏழாம் பாடல் வரையில் மொத்தம் 6 பாடல்களில் பகவத் கீதையின் சாராம்சத்தை விளக்கி உள்ளார்.

இரண்டாம் பாடலில் மாயை, மனம் குறித்தும், மூன்றாம் பாடலில் ஐம்புலன்கள், பஞ்சேந்திரியங்கள், திரிகுணங்கள் குறித்தும், நான்காம் பாடலில் எம்பெருமானின் அந்தர் யாமி குணத்தையும், ஐந்தாம் பாடலில் பஞ்ச பூதங்களால் இந்த உடலின் ஆக்கத்தையும் அதனுள்ளிருந்து இறைவன் ஆட்சி புரிவதை யும் எல்லாவற்றிலும் இறைவன் இருப்பதை யும் வேதத்தின் அந்தமாக இறைவன் விளங்கு வதையும், ஆறாம் பாடலில் நர–நாராயண சம்பந்தத்தையும், ஏழாம் பாடலில் நர–நாராயணனுக்கு உதாரணத்தையும் எடுத்து இயம்புகின்றன. மொத்தத்தில் இந்த ஆறு பாடல்களில் இறை, மாயை, ஜீவன் அல்லது ஆன்மாவைப் பற்றி விளக்கி உள்ளார்.

தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திர பூமியில் பீஷ்மர் முதலான உறவினர்களும் துரோணர் முதலான ஆசான்களும் எதிரிகளின் படையில் நிற்கக் கண்ட அர்ஜுனன் அவர்களைப் பகைவர்களாக எண்ணிப் போர் புரிய அஞ்சுகின்றான். அப்போது கண்ண பிரான் அர்ஜுனனுக்கு உபதேசித்த பகவத் கீதையின் கருப்பொருளை வில்லிபுத்தூர் ஆழ்வார் இங்கே விளக்குகின்றார்.

கண்ணன் அர்ஜுனனை நோக்கி இவ்வாறு உரைக்கின்றார், மாயை என்கிற பெண்ணிடம் மனம் என்கிற புதல்வன் தோன்ற, அவன் தூய அறிவாகிய மெய்ஞ்ஞானத்தைக் கண்ணுக் கும் கருத்துக்கும் புலனாகாதவாறு மறையச் செய்தனன். ஒருவன் தாய், தந்தை, மைந்தர், மனைவி என்று அழியக் கூடிய உடல் கொண்டு மேவுகின்ற பந்தத்தால் சுட்டப்படுமாறு செய்ப வனும் அப்புதல்வனே ஆவன். இப்பந்தங்கள் யாவும் மனத்தில் தோன்றும் நினைவுகள் என அறிக! என விளக்கப்பட்டு உள்ளது.

*தாயொடு, தந்தை, மக்கள், தாரம், என்று*
*இவர்பால் வைத்த*
*நேயமும் அவன்தனாலே நிகழ்ந்தது ஓர்*
*நினைவு கண்டாய்.*

–வில்லி பாரதம், வீட்டும பருவம், பா.2

வில்லிபாரதம் தொடரும்...





திருவேங்கடவனைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு மருத்துவர்களும் தொண்டு செய்திடும் வகையில் "ஸ்ரீவாரி வைத்திய சேவை" என்றொரு புதிய திட்டத்தை தி.தி.தே. ஆரம்பித்துள்ளது. இது இந்தியா மட்டுமின்றி உலகெங்கிலும் உள்ள புகழ் பெற்ற மருத்துவர்கள் தங்கள் அறிவாற்றலை திருப்பதியில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு அளிக்க உதவுகிறது. தன்னார்வத் தொண்டு புரிய நினைக்கும் மருத்துவர்கள் தங்கள் பெயரை https://ttdevasthanams.ap.gov.in/srivari-seva/instructions" எனும் வலைதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு, குறிப்பிட்ட நாட்களில் திருப்பதிக்கு வந்து தேவஸ்தான மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு மருத்துவம் செய்யலாம்.

தி.தி.தேவஸ்தான மருத்துவமனைகளில் தகுதி பெற்ற மருத்துவர்கள் இருந்தாலும், உலகளாவிய புகழ் பெற்ற மருத்துவர்களின் ஆலோசனை இவர்களுக்கு கிடைக்க இத்திட்டம் உதவுகிறது.

தி.தி.தே. நடத்தும் ஸ்விம்ஸ், பர்ட், பத்மாவதி இருதயாலயம், ஆயுர்வேத மருத்துவமனை மற்றும் கல்லூரிகளில் பதிவு செய்த மருத்துவர்கள் தொண்டு ஆற்றலாம். இந்தியாவில் மட்டுமின்றி, வெளி நாடு களில் இருந்தும் கூட இங்கு தொண்டாற்றுவதற்கு மருத்துவர்கள் விருப்பம் தெரிவித்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்கிறார்கள். இது மட்டுமின்றி, அவர்கள், ஆன்லைன் மூலம் பாடங்கள் எடுக்கவும், சிறப்பு சொற்பொழிவு ஆற்றவும் கூட செய்கிறார்கள். இது தி.தி.தே. நடத்தும் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அவர்களின் ஆற்றலை மேன்மேலும் வளர்த்துக் கொள்ள ஒரு அபூர்வ அவகாசமாகப் பார்க்கப்படுகிறது.

**மருத்துவர்களே வாருங்கள்!**
**பிறப்பறுக்கும் மருத்துவனான வேங்கடவனின்**
**பக்தர்களுக்குத்தொண்டாற்றுவோம்!!**

# குறுக்கெழுத்துப் புதிர் -124



## இடமிருந்து வலம்

01. வேலூர் மாவட்டத்தில் பெருமாள் பள்ளி கொண்ட தலம்...(6)
03. ...(10) பெரியாழ்வார் திருமொழி பாசுரம்.
05. சங்கரன்கோயிலில் அருள் புரிவோர் ...(8)ன்.
07. திருக்கச்சி நம்பிகள் அவதார ஸ்தலம்...(8)
08. கிருஷ்ணரின் வேறு பெயர்...(4)
10. பாடலோடு தொடர்புடையது...(3)
11. ஸ்ரீநிவாசரின் திருநட்சத்திரம்...(5)
13. மணவாள மாமுனிகள் அவதார ஸ்தலம்...(9)
18. ...(2) மருதிடை - பாசுரம் பெரிய திருமொழி.
22. ...(3) காத்தவன் கண்ணன்.

## வலமிருந்து இடம்

05. குடந்தையில் அருள்பவர்...(5).
06. மரக்காலை தலைக்குக் கீழே வைத்து பள்ளி கொண்ட பெருமாள்...(6)
09. முருகப் பெருமானின் பெயர் களில் ஒன்று...(5).
12. சரஸ்வதி தேவி தன்னுடைய திருக்கரங்களில் ஏந்தி இருப்பது...(2)
17. திருவ...(4) ஒரு திவ்ய தேசம்.
19. தினமும்...(3) சகஸ்ரநாமம் பாராயணம் செய்தல் நன்று.
20. தினமும்...(5) ஜபிக்க வேண்டும்.
21. ஸ்ரீகிருஷ்ணர் லீலைகளை நடத்திய இடம்...(4)
22. ...(2) நாடன் என்றழைக்கப்படுப வர் திருமங்கை ஆழ்வார்.
23. நாம்...(3) பெற பகவான் நாமம் உச்சரிக்க வேண்டும்.

**தொகுப்பு : திரு. எம்.ராஜன், சென்னை,**

புதிருக்கான விடை 42ஆம் பக்கத்தில் உள்ளது.
வாசகர்கள் சரி பார்க்கவும்...

## மேலிருந்து கீழ்

01. நாலாயிர திவ்ய பிரபந்தம் பாடியவர்கள்...(10)
02. ...(4) வண்ணனை-அமலனாதி பிரான் பாசுரம்.
04. பூமியைத் தாங்குவதால்...(3) தேவி.
06. திருஎவ்வுளூர் திவ்ய தேசப் பெருமாள்...(9)
10. மன அமைதிக்கு ...(4) தியானம் செய்வர்.
11. சென்னை (கோவளம்) அருகில் உள்ள திவ்ய தேசம்...(6)
14. ...(8) சூழ வலம் செய்து - நாச்சியார் திருமொழி பாசுரம்.
15. ஸ்ரீராமாநுஜர் திருநட்சத்திரம்...(5)
16. பரந்தாமன் எழுந்தருளும் இடம் ...(2) கடல்.
17. ...(4)த் தோன்றல் ஸ்ரீராமர்.

## கீழிருந்து மேல்

03. ...(4) பெருமாள் திருமொழிப் பாசுரம்.
24. நவ நரசிம்மர் சேவை சாதிக்கும் இடம்...(5).

# திருவேங்கடவனின் தயை மழை!

- திரு. பொ.பாலாஜிகணேஷ், சிதம்பரம்.9842550844

தொடர்ந்து வெயில் சுட்டெரித்துக் கொண்டு இருக்கும்போது திடீரென ஒரு மழை வந்து நம்மை குளிர்விக்கும்போது நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறோம்? நாம் மட்டுமா மகிழ்ந்து போகிறோம்? நம்மைச் சுற்றி இருக்கும் செடிகளையும், கொடிகளையும் ஒரு நிமிடம் பார்த்தால், லேசாக பட்ட மழைத் துளியில் நனைந்து தம் பசுமைக்கு மேலும் பசுமையைச் சேர்த்துக்கொண்டு எவ்வளவோ நாட்கள், எவ்வளவோ உரங்கள் போட்டு பூக்காத பூக்கள் கூட மழையைக் கண்ட சந்தோஷத்தில் பூத்துக் குலுங்குவதை நாம் பல நாட்கள் பார்த்திருப்போம்.

இதன் மூலம் இயற்கை நமக்கு சொல்லித் தரும் பாடம் என்ன தெரியுமா? நாம் செய்த கர்ம வினைகளால் நாம் அவதியுற்று கொண்டிருக்கும் போது நம்மை படைத்தவனின் கருணை எனும் மழை, அந்த தயை மழை ஒரு துளி நம் மீது பட்டுவிட்டால் போதும், வாழ்க்கையில் நிம்மதி, சந்தோஷம் என எல்லாம் தானாகவே வர ஆரம்பிக்கும். திருமலையில் நமக்காகக் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீநிவாசனின் தயை குணத்தை மட்டுமே போற்றி 100 சுலோகங்களைக் கொண்ட, "தயா சதகம்" எனும் ஸ்தோத்திரத்தை அருளி இருக்கிறார் ஸ்வாமி ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன்.

ஸ்ரீநிவாசப் பெருமாளை நாம் தரிசனம் செய்யும்போது ஒரு விஷயம் நமக்கு நன்றாகப் புரியும். அவரது திருக்கரங்களைப் பார்க்கும்போதே நமக்கு அப்பெருமாளின் தயை குணம் புரியும். அவரது வலது திருக்கரம் என்பது அவரது திருவடியைக் காட்டியபடி இருக்கும். இடது திருக்கரமோ, "நான் உங்களை என்னோடு சேர்த்துக் கொள்கிறேன்" என்று சொல்வது போலவே இருக்கும். "நீங்கள் எவ்வளவு பாவங்கள் செய்தவர்களாக இருந்தாலும் சரி, இதோ என் திருவடியைப் பற்றிக்கொள்ளுங்கள், நான் உங்களை எம் தயை குணத்தால் ஏற்றுக் கொள்கிறேன்" என்று அவரது திருக்கரங்கள் நமக்குக் காட்டி கொடுக்கிறதல்லவா? "என் கருணையை நம்புங்கள். என் கருணையைப் பற்றிக் கொள்ளுங்கள்" என்று காட்டிக்கொண்டே காட்சி தந்து கொண்டே இருக்கிறான் திருவேங்கடமுடையான். ஆனாலும், நமக்கு அப்பெருமாளின் மிக உயர்ந்த கல்யாண குணமான, தயை குணம் பற்றித் தெரியவில்லையே என்பதற்காகவே தேசிகன் பெருமாளின் கருணை குணத்தை மட்டுமே போற்றி அருளிச் செய்ததே, "தயா சதகம்".



*''காருண்யை காந்திநோ பஜே''* என்று திருவேங்கடவனின் காருண்ய குணத்தை மட்டுமே வணங்கியவர்கள் ஆழ்வார்கள். பெருமாளிடம் இருக்கும் அனைத்து குணங்களுமே தயை

எனும் குணம் சொல்வதைத்தான் கேட்குமாம். ஞானம், சக்தி போன்ற குணங்கள் கூட தயை சொன்னால்தான் வெளிப்படும்.

பெருமாளை அனுபவிப்பதை விட பெருமாளின் குணங்களை அனுபவிப்பது தான் விசேஷம் என்று வேதம் காண்பித்துக் கொடுத்திருக்கிறது. "பெருமாளே, உன்னிடம் இருக்கும் தயா குணத்தால் நீ என்னை மன்னித்து ஏற்றுக்கொள்வாய் என்ற நம்பிக்கையில் நான் உன்னைச் சரணடைகிறேன்" என்று பெருமாளின் தயா குணத்தை பொருட்டே நாம் சரணடைய வேண்டும் என்றும் சில பெரியோர்கள் அழகாய் கூறுவார்கள்.

திருவேங்கடமுடையானை கரும்பு என்றும், அவனின் அந்த கருணைதான் அந்த கரும்பிலிருந்து வரக்கூடிய சாறு என்றும், அப்படி அந்தக் கரும்புச் சாறு ஒன்று சேர்ந்து உருவான சர்க்கரைக் கட்டியாக, கல்கண்டு கட்டியாக திருமலை திகழ்கிறது என்கிறார். தயா சதகத்தின் முதல் சுலோகத்தில்,

*ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: ஸ்ரீநிவாஸாநுகம்பயா*
*இக்ஷு ஸார ஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா*
*சர்க்கராயிதம்*

திருமலையானிடம் இருக்கும் அந்த தயை குணத்தையே, தயா தேவியாகக் கொண்டு தயா சதகத்தில் அருளி இருக்கிறார் தேசிகன்.

நாம் செய்திருக்கும் பாவங்களோ கடலளவை போன்றது. செய்திருக்கும் புண்ணியங்களோ விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இருக்கிறது. அப்படி நாம் செய்த பாவங்களைப் பார்த்தாலே நாம் மூர்ச்சையாகி விடுவோம் என்று சொல்லும் ஸ்வாமி தேசிகன், திருவேங்கடமுடையானோடு இருக்கும் தயா தேவியே நீயே முதலில் சஞ்ஜீவினியாய் இருந்து அந்தப் பாவங்களை நீக்க வேண்டும்.

*"ஸஞ்ஜீவயது தயே மாம்"* என்று "மூர்ச்சையாகி கீழே விழுந்தவரை நீ தான் உயிர் பிழைக்க வைக்க வேண்டும்" என்கிறார் 12வது சுலோகத்தில். 13து சுலோகத்தில், *"பகவதி தயே பவத்யா"* என்று "தயா தேவியே, எம் பாவங்கள் எல்லாம் உன் தயையில் மூழ்கி விட்டன" என்கிறார். தயா சாகரத்தில் பாவங்கள் எல்லாம் மூழ்கியே விட்டன.

பிரளய காலத்தில் தொடங்கி நம்மை தொடர்ந்து காத்துக்கொண்டே இருக்கிறாள் தயா தேவி என்று கொண்டாடுகிறார், தம்முடைய 16 வது சுலோகத்தில்.

திருவேங்கடமுடையானிடம் இருக்கும் அந்த தயா தேவியை (தயை குணத்தை) நாமும் மனதில் நிறுத்திக்கொள்வோம். தம்முடைய உயர்வான அந்த தயை மழையை நிச்சயம் நம் மீதும் எல்லா நேரமும் பொழிந்துக்கொண்டே இருப்பார் ஏழுமலையான் என்றே உறுதியாக நம்புவோம்.

## ஸப்தகிரி செப்டம்பர் 2026 விடைகள்

1. திருமழிசையாழ்வார்.
2. வேதத்தின் வடிவமானவன்.
3. ஸ்ரீமணவாள மாமுனிகள்.
4. திருவேங்கடமுடையான்.
5. திருவேங்கடமுடையான்.
6. வராஹப் பெருமான்.
7. பெரியாழ்வார்.
8. திருமழிசையாழ்வார்.
9. வேங்கடாத்ரி கவி.
10. இராமபிரான்.
11. ரிக் வேதம்.
12. பிரதிவாதி பயங்கரம் அண்ணன்.
13. வேங்கடாத்ரி மலை.
14. திருமங்கை ஆழ்வார்.
15. பூதேவி-வராஹ பெருமாள்.



## போட்டி எண். 50

**சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் எம்.ஜீ. பிரணவ் கிருஷ்ணா, அத்வைத ஆசிரமம் சாலை, சேலம்.
2. செல்வி அ. ஆதித்யா, உக்கடம், கோவை.
3. செல்வி என்.ஆர். ஜனனி, கவரப்பேட்டை, திருவள்ளூர்.



# ஸ்ரீவைகுண்டகத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும்

- திரு.ஏ.கே.கோபி,
கள்ளக்குறிச்சி,
94438 79592.

*ஆகஸ்ட் மாத இதழின் தொடர்ச்சி...*

**பகவதனுபவம்**

*ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:*
*இதி ப்ரணம்ய உத்தாய உத்தாய புந: புந: ப்ரணம்ய*
*அத்யந்த ஸாத்வாஸஸ விநயாவநதோ பூத்வா பகவத்*
*பாரிஷத கணநாயகை:த்வாரபாலை க்ருபயா*
*ஸ்நேஹ கர்ப்பா த்ருஸாவலோகிதக: பூத்வா.*

ஸ்ரீவைகுண்ட வாசலில் உள்ள த்வாரபாலகர்கள் மனதார வாழ்த்தி அன்பினைப் பொழிந்து அடியேனை உள்ளே அனுமதித்தவுடன் திருமாமணி மண்டபத்தில் நித்யசூரிகள் சூழ அமர்ந்து சேவை சாதிக்கும் ஸ்ரீமந்நாராயணனை தூரத்தில் இருந்தும், அருகில் இருந்தும் பலமுறை வணங்குவேன். எம்பெருமானிடம் உள்ள பயத்தினாலும் மரியாதையினாலும், ஆடைகளைத் திருத்தியவாறு வாயினைப் பொத்திக்கொண்டு தலையினை முன்னோக்கி சாய்த்து வணங்குவேன். நாராயணா எம்பெருமானே பகவானே அடியேனை அனைத்துப் பற்றுகளிலும் இருந்து நீக்கி எப்போதும் உனக்கே தொண்டு புரிவதற்கானத் தகுதியினை அளித்து அடியேனை ஆட்கொண்டருளவேண்டும்.

*வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்*
*வைகுந்தன் தமரெமர் எமதிடம் புகுதென்று*
*வைகுந்தத் தமரரும் முனிவரும் வியந்தனர்*
*வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே*

– திருவாய்மொழி –10–9–9

*உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து நான்*
*அங்குற்றேனல்லேன்* – திருவாய்மொழி 5–7–2

*காலுமெழா கண்ணநீரும் நில்லா உடல்சோர்ந்து*
*நடுங்கி,குரல்*
*மேலுமெழா மயிர்க்கூச்சுமறா என தோள்களும்*
*வீழ்வொழியா...*

– பெரியாழ்வார் திருமொழி 5–3–5

*அழுவன் தொழுவன்ஆடிக்காண்பன் பாடி*
*அலற்றுவன்* – திருவாய்மொழி 5–8–5

*இறவு செய்யும் பாவக்காடு தீக்கோளீஇ*
*வேகின்றதால் அறிவையென்னு அமுதஆறு*
*தலைப் பற்றி வாய்க்கொண்டதே*

–பெரியாழ்வார் திருமொழி 5–4–2

*த்த்பாவபாவமா பந்நஸ் ததோஸஸௌ*
*பரமாத்மநா பவத்யபேதீ பேதஸ்ச*
*தஸ்யாஜ்ஞாநக்ருதோ பவேத்*

– விஷ்ணுபுராணம் 6–7–95

பரமாத்மாவின் தன்மைகளைப்போன்ற தன்மைகளை அடையும் முக்தனான ஜீவாத்மா பரமாத்மாவுடன் குணங்கள் விஷயத்திலே பேதமற்றவனாகிறான். மற்றைய பேதங்கள் ஞானத்தைக் காட்டிலும் வேறுபட்ட கர்மத்தினால் உண்டாகிறது.

*ஸோஸஸ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ*
*ப்ரஹ்மணா விபஸ்தா.* – தை.ஆ.–1–2

முக்தாத்மா பகவானின் அனைத்து கல்யாண குணங்களையும் சர்வேச்வரனான பிரம்மத்துடன் கூடி அனுபவிக்கிறான்.

*நாஸ்நந்தி ந பிபந்தி ஏததேவாம்ருதம்*
*த்ருஷ்ட்வா த்ருப்யந்தி*

– சாந்தோக்ய உபநிஷத் 3–10

அவர்கள் உண்பதுமில்லை குடிப்பதுமில்லை அம்ருதமான பகவானைக் கண்டு பேரின்பம் அடைகிறார்கள்.

*யேநயேந தாதா கச்சதி தேந்தேந ஸஹ கச்சதி*
*தத்யதா தருணவத்ஸா வத்ஸம் வத்ஸோ வா*
*மாதரம் சாயாவா ஸத்வமநுச்சேத் ததாப்ரகாரம்*

தாய்ப்பசு இளங்கன்றினை எவ்வாறு பிரியாமல் இருக்குமோ, இளங்கன்று எவ்வாறு தாய்ப் பசுவினைப் பிரியாமல் இருக்குமோ, சரீரத்தின் நிழல் சரீரத்தினை பிரியாமல் எவ்வாறு சரீரத்தின் கூடவே செல்லுமோ அவ்வாறே எப்படி பரமபுருஷன் செல் கின்றானோ அப்படியே முக்தனும் பகவானுடன் கூடவே சென்று கைங்கர்யம் இடைவீடின்றி செய்கிறான்.

**நான்காவது கூர்ணை (பகவதஞ்சலி)**

*தத: பகவதா ஸ்வயமேவ ஆத்மா ஸஞ்ஜீவநேந*
*அவலோகநேந அவலோக்ய ஸர்வதேஸ*
*சர்வகால ஸர்வா வஸ்த்தோசித அத்யந்த*
*சேஷபாவாய ஸ்வீக்ருத: அநுஜ்ஞாதஸ்ச*
*அத்யந்த ஸாத்வஸ விநயாவநத: கிங்குர்வாண:*
*க்ருதாஞ்சலிபுட: பகவந்தம் உபாஸீத.*

நான்காவது சூர்ணையில் பகவானின் கருணை யான திருக்கண் நோக்கத்தினால் கரையேற்றப் பெற்ற ஆத்மாவானவன் மிகவும் பவ்யமான நிலையில் எம்பெருமானுக்கு வணக்கமும் அஞ்சலி யும் செலுத்தியபடி சர்வேச்வரனின் திருக்கல்யாணக் குணங்கள் முழுவதையும் அனுபவிக்கும் பேற்றினை எம்பெருமானார் அருளுகிறார்.

*முக்தாநாம் லஷ்மணம் ஹ்யேதத் யச்ச்வேதத்வீப*
*வாஸிநாம் நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம*
*இத்யேவ வாதிந:* – பார–ஸாந்தி 344–45

ஸ்ரீவைகுண்டத்திலே முக்தர்கள் எப்போதும் பகவானுக்கு நித்ய கைங்கர்யம் செய்து ஆனந்தித்து இருப்பார்கள். தங்களுடைய கைகளால் பவ்யமாக பகவானை அஞ்சலி செய்தவண்ணம் "நம: நம:" என இடைவீடின்றி பிரார்த்தனைச் செய்து துதித்த வண்ணம் இருப்பார்கள்.

*வாழ்த்துகவாய் காணக்கண் கேட்க செவி*
*மகுடம் தாழ்த்தி வணங்குமின்கள்*
*தன்மலரால்-சூழ்த்த துழாய்மன்னு*
*நீன்முடியென் தொல்லைமால் தன்னை*
*வழாவண் கை கூப்பி மதித்து*

– நான்முகன் திருவந்தாதி–11

*நினைந்தென்னுள் ளேநின்று நெக்குக்கண்கள்*
*அசும்பொழுக நினைந்திருந்தே சிரமம்*
*தீர்ந்தேன் நேமி நெடியவனே*

– பெரியாழ்வார் திருமொழி 5–4–8

**ஐந்தாவது கூர்ணை (ஸ்ரீவைகுந்த கைங்கர்யம்)**

*ததஸ்ச அநுபூயமாந பாவவிசேஷ : நிரதிஸய*
*அந்யத் கிஞ்சித்கர்த்தும் த்ருஷ்டும் ஸ்மர்த்தும்*
*அஸக்த: புநரபி சேஷ பாவமேவ*
*யாசமாந: பகவந்தமேவ அவிச்சிந்ந*
*ஸ்ரோதோரூபேண அவலோகநேந*
*அவலோகயந் கஸீத:*

ஐந்தாவது சூர்ணையில் எம்பெருமானின் பக்கலிலே கைங்கர்யம் செய்யும் பாக்கியம் வாய்க்கப்பெற்ற ஆத்மாவானவன் எம்பெருமானின் ஜகத் நிர்வாகத்தைக் கண்டு வியந்தவனாய் வேறொன்றிலும் மனம் செல்லாமல் கண்கள் இமைப்பதைகூட விரும்பாமல் இந்தப் பேற்றினால் உண்டாகும் ஆனந்தம் எப்போதும் நிலைக்க எம்பெருமான் அருள்புரிய வேண்டிநிற்பதாக அருளுகிறார் எம்பெருமானார்.



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயுதிராஜ வைபவம்



*ஸ்ரீரங்க3ராஜார்யவர: கத3ாசித் க3த்வாத2*
*காஞ்சீம் வரத3ம் ப்ரஸம்ய।*
*ஆத3ாய ராமாநுஜஸம்யமீந்த்3ரம்*
*ஸ்ரீரங்க3 மேவாப்துமத2 ப்ரதஸ்தே2 ॥*

**(54)**

**ஒரு சமயம், திருவரங்கப் பெருமாளரையர், காஞ்சிக்குச் சென்று வரதனை வணங்கி, அவரிடமிருந்து வரமாகப் பெற்று அழைத்துக் கொண்டு, ஸ்ரீரங்கத்துக்குப் புறப்பட்டார்.**

**– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது**

*ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி*
*வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்*

– திருவாய்மொழி 3–3–1

*கண்டுகொண்டென் கைகளார நின்*
*திருப்பாதங்கள் மேல் எண்டிசையுமுள்ள*
*பூக்கொண்டேத்தி யுகந்துகந்து*
*தொண்டரோங்கள்*
*பாடியாடச் சூழ்கடல் ஞாலத்துள்ளே*

–திருவாய்மொழி 4–7–8

*கிடந்தநாள் கிடந்தாய் எத்தனைகாலம்*
*கிடத்தி?உன் திருவுடம்பசைய தொடர்ந்து*
*குற்றேவல் செய்து தொல்லடிமை வழிவரும்*

– திருவாய்மொழி 9–2–3

*உலகுதன்னை நீ படைத்தி யுள்ளொடுக்கி*
*வைத்தி மீண் டுலகுதன்னுளே*
*பிறத்தியோரிடத்தை யல்லையால் உலகு*
*நின்னொடு ஒன்றிநிற்க வேறுநிற்றி யாதலால்*
*உலகில்நின்னை யுள்ளசூழல் யாவருள்ள*
*வல்லரே?*

–திருச்சந்தவிருத்தம் –12

*அஞ்சன வண்ணனே என்னும் எழுந்துமேல்*
*நோக்கி இமைப்பிலள் இருக்கும் எங்ஙனே*
*நோக்குகேன் என்னும்*– திருவாய்மொழி 7.2.8

*இட்டகால் இட்டகைகளாய் இருக்கும்*
*எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும்*

– திருவாய்மொழி 7–2.4

தொடரும்...

## நன்றி சொல்ல மறந்துவிட்டோமா?

ஒரு குறை வந்தவுடன் பகவானிடம் முறையிடுகிறோம். ஒரு வேண்டுதல் இருந்தால் உடனே பிரார்த்திக்கிறோம். ஒரு துன்பம் வந்தால், "நாராயணா! என்னைக் காப்பாற்று" என்று அழைக்கிறோம். ஆனால், எல்லாம் நன்றாக இருக்கும் நாட்களில் "நன்றி நாராயணா!" என்று எத்தனை முறை சொல்கிறோம்?

இன்று நாம் எழுந்திருப்பதே ஒரு அருள்; உணவு கிடைப்பது ஒரு அருள்; நம்மை நேசிக்க சிலர் இருப்பது ஒரு அருள்; பகவானின் திருநாமத்தைச் சொல்ல வாய்ப்பு கிடைத்திருப்பது மிகப்பெரிய பாக்கியம்; இல்லாதவற்றை எண்ணிக்கொண்டே இருந்தால் குறைகள் பெரிதாகத் தெரியும். கிடைத்தவற்றை எண்ணத் தொடங்கினால் பகவான் நம் வாழ்வில் ஏற்கனவே செய்திருக்கும் அனுக்ரஹங்கள் புரியத் தொடங்கும்.

இன்று பகவானிடம் எதையும் கேட்பதற்கு முன் ஒரு நிமிடம் அமைதியாக இருந்து, உங்கள் வாழ்க்கையில் கிடைத்த மூன்று நல்ல விஷயங்களை நினைத்து இவை "அனைத்திற்கும் நன்றி நாராயணா!" என்று மனதாரச் சொல்லுங்கள்.

**இன்றைய சிந்தனை:** வேண்டுதல் நிறைவேறிய பிறகு மட்டும் நன்றி சொல்வது பக்தி அல்ல; வேண்டிக்கொள்ள இன்னும் பல இருந்தாலும், கிடைத்தவற்றை உணர்ந்து நன்றி சொல்வதும் பக்தியே.




**இன்றைய சங்கல்பம் :**

"இன்று குறைகளை எண்ணுவதற்கு முன், எனக்குக் கிடைத்த அருள்களை நினைத்து நன்றி கூறுவேன்".

**இன்றைய நாமம் :**

*''ஓம் நமோ நாராயணாய''* ஸ்ரீமந்நாராயணனின் திவ்ய அனுக்ரஹம் உங்கள் இதயத்தில் நன்றியுணர்வையும், மனதில் நிறைவையும், இல்லத்தில் சாந்தியையும், வாழ்வில் மங்களத்தையும், நித்ய பகவத் கைங்கர்ய பாக்கியத்தையும் அருளட்டும்!

**தொகுப்பு : திரு. எம். அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி, 97503 33265**

# காரிருள் நீக்கிடும் கார்த்திகை

"கார்த்திகையோ கல்யாணமோ" என்று பெரியவர்கள் கூறுவார்கள். "கார்த்திகைக்கு அப்புறம் மழை இல்லை; கர்ணனுக்கு அப்புறம் கொடையில்லை" என்றும் சொல்வார்கள். கார்த்திகை மாதத்திலே பல சிறப்பான விசேஷங்கள் என்ன என்று பார்ப்போம்.

## முடவன் முழுக்கு

கார்த்திகை மாத முதல் நாள் பகவான் முடவன் ஒருவனுக்கு முக்தி அளித்தாராம். எனவே அந்த தினத்தில் கடல், நதி என புனித நீராடல் செய்தால் நமக்கு முக்தியை அளிக்கும். இல்லை என்றால் வீட்டிலேயே "கங்கா யமுனா சரஸ்வதி ஸ்வாமி புஷ்கரணி" என புண்ணிய நதிகளின் பெயரைச் சொல்லி ஸ்னானம் செய்தால் நமக்கு புண்ணியம் கிடைக்கும்.

## தாயார் உற்சவம்

கார்த்திகை மாத பஞ்சமி திதியில் சுக்கிர வார தினத்தில் ஸ்ரீநிவாசரின் தர்ம பத்தினி திருமகளின் அவதாரமான ஸ்ரீ பத்மாவதி என்கிற ஸ்ரீ அலர்மேல் மங்கைத் தாயார் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையில் கோடி சூரிய பிரகாசத்துடன் தோன்றியதாக ஐதீகம். எனவே திருப்பதி திருச்சானூர் திருத்தலத்தில் தாயாருக்குப் பற்பல வாகன சேவைகளோடு உற்சவங்கள் கொண்டாடப்படுகிறது.

## கார்த்திகை ஞாயிறு

கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் நரசிம்மரை வழிபடுவது பற்பல நன்மைகளை அளிக்கும். ஆண்டு முழுவதும் தவத்தில் இருக்கும் சோளிங்கர் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி கார்த்திகை மாதம் மட்டுமே கண் திறந்து சேவை தருகிறார். எனவே கார்த்திகை மாதத்தில் சோளிங்கர் எனும் சோழ சிம்ம புரத்திலே லட்சக்கணக்கான பக்தர்கள் நரசிம்மரை தரிசித்து மகிழ்வர்.



## கைசிக ஏகாதசி

கார்த்திகை மாத சுக்லபக்ஷ ஏகாதசிதான் கைசிக ஏகாதசி ஆகும். அன்று முழுவதும் உப்பில்லாமல் உணவு–பழம், பால்



என உண்டு விரதம் இருத்தல் வேண்டும். நங்கை நல்லூரில் உள்ள ஸ்ரீஉத்தர குருவாயூரப்பன் ஆலயத்தில் எல்லா சன்னதிகளில் உள்ள மூர்த்தி களுக்கும், இறுதியில் உத்தர குருவாயூரப்பனுக்கும் கூடை கூடையாக ரோஜா, மல்லிகை, சாமந்தி, முல்லை, தாமரை என மலர்களுடன் இருவாட்சி, துளசி போன்றவை சமர்ப்பிக்கப்படும். மலர் மழை பொழிவதைப் போல அற்புத தரிசனம் கிடைக்கும். கைசிகப்புராணம் சில ஆலயங்களில் வாசிப்பார்கள். சில ஆலயங்களில் நம்பாடுவான் நாடகமும் நடத்தப் படும்.

**கார்த்திகை தீபம்**

கார்த்திகை பௌர்ணமியும்–கிருத்திகையும் சேரும் நன்னாளில் திருவண்ணாமலையில் அகண்ட தீபம் ஏற்றுவார்கள். எல்லா வீடுகளிலும் விளக்குகளை வரிசையாக அழகாக ஏற்றுவார்கள். அவல், பொரி, வேர்க்கடலை உருண்டைகள் செய்து அப்பம் நிவேதனம் செய்வார்கள்.

**விளக்கு தானம்**

கார்த்திகை மாதத்தில் சின்னச் சின்ன விளக்குகள் வாங்கி பெண்களுக்கு தாம்பூலத்தில் வைத்து கொடுக்கலாம். ஆலயங்களுக்கு விளக்குகள் சமர்ப்பித்தால் நமது விருப்பங்கள் யாவும் நிறைவேறும் என்கிற நம்பிக்கையும் உண்டு. இரண்டு குத்து விளக்குகள் பித்தளையில் வாங்கி நன்கு துடைத்து மஞ்சள், குங்குமம் வைத்து நிறைய நெய் விட்டு பஞ்சினை போட்டு மலர் சாற்றி ஆலயத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். பின்பு ஐந்து முக தீபங்களையும் ஏற்றி அர்ச்சகரிடம் கொடுத்து, சன்னிதியில் வைத்து, அர்ச்சனைகள் செய்வது நன்று. குத்து விளக்குகளை வெள்ளிக் கிழமைகளில் சமர்ப்பித்தல் சகல நலன்களும் நமக்கு கிடைத்திடும். இதை நம்பிக்கை, தூய பக்தி இவற்றுடன் சமர்ப்பிக்க வேண்டும். கார்த்திகை மாதம் கந்தனுக்கும் உகந்தது.

எல்லா விஷ்ணு ஆலயங்களிலும் அன்று மூலவருக்கு தைலம் காப்பு சாற்றி மறுபடியும் வைகுண்ட ஏகாதசி அன்று மூலவரை தரிசிக்க முடியும். எல்லோருக்குமே சொந்த வீடு, உத்தியோக உயர்வு, திருமணம், புத்திர பாக்கியம், நிறைந்த செல்வம் என பல்வேறு ஆசைகள் இருக்கும். நியாயமான ஆசைகள் கண்டிப்பாக நிறைவேறும்.

எனவே கார்த்திகை மாதத்தில் காரிருள் நீங்கி கஷ்டங்கள் தொலைய விருப்பங்கள் நிறைவேற விளக்கு ஏற்றியும், விளக்கு தானம் செய்தும், விளக்குகளை ஆலயங்களுக்குச் சமர்ப்பித்தும் மகிழ்வோம்.

**– திருமதி வஸந்தா வேணுகோபால், சென்னை.**




திருமலையில் கைசிக துவாதசியன்று ஸ்ரீஉக்ர ஸ்ரீநிவாசப் பெருமாள் உபய நாச்சிமார்களுடன் சூரிய உதயத்திற்கு முன்னரே திருவீதி உலா வருவர்.

## --- கைசிக துவாதசி ---

**கைசிக துவாதசியன்று எம்பெருமானின் சன்னதியில் அமர்ந்து இந்த கைசிக மஹாத்மியத்தை எவன் வாசிக்கிறானோ அவனும், அதை எவர் எவர் கேட்கிறார்களோ அவர்களும் பல்லாண்டு வாழ்வார்கள் என்பது திண்ணம் என்று சான்றோர் கூறுவர்.**

**வருடாவருடம் அனைத்து வைணவ ஆலயங்களிலும் கைசிக துவாதசியன்று இந்த புராணம் பண்டிதர்களால் வாசிக்கப்படுகிறது.**

**திருவேங்கடத்து எம்பெருமான் நின்ற கோலத்தில் தரிசனம் தரும் திருமலையில் இந்த புராணம் காஞ்சிபுரம் தாத்தாசார்ய வம்சத்தைச் சேர்ந்தவர்களாலும், கீழ் திருப்பதியில் ஸ்ரீகோவிந்த ராஜப் பெருமாள் கோயிலில் திருமலை குமார தோழப்ப வம்சத்தைச் சேர்ந்தவர்களாலும் வாசிக்கப்படுகிறது. அவர்களை கௌரவிக்கும் வண்ணமாக எம்பெருமானின் முன்பு பரிவட்ட மரியாதை வழங்குவதோடு, அவர்களைப் பல்லக்கில் அமர வைத்து, மேள தாளத்தோடு நான்கு மாட வீதிகளிலும் உலா வரச் செய்து அவர்களுடைய திருமாளிகைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.**



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்


தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே.சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.


ஆகஸ்ட் மாத இதழின் தொடர்ச்சி...

"சௌனகாதி முனிவர்கள் சூதர் மகரிஷியிடம் வகுளமாதா யார்?" எனக் கேட்டனர். அதற்கு சூதர் வகுளமாதா குறித்துக் கூறலானார்...

வகுள மாதா வேறு யாரோ அல்ல. அவர் யசோதா தேவியின் மறு உருவமே. சிறு பிள்ளையான கண்ணனின் ஆடல் பாடல்களை எல்லாம் பார்த்து பார்த்து மகிழ்ந்து மரணிக்கும் தருவாயிலும் தன் பாசப் பிள்ளையான கண்ணனையே நினைத்து இருந்தாள். யசோதைக்கும் கண்ணனுக்குமிடையே இருந்த பாசப் பிணைப்பைக் கருத்தில் கொண்டு பிரம்மா யசோதா தேவியை வகுள மாதாவாகப் பிறப்பெடுக்கச் செய்தார். மேலும், அவளை பூவராக ஸ்வாமியிடம் இருக்கும்படி செய்தார். ஸ்ரீவராக ஸ்வாமியின் கட்டளைக்கு இணங்க ஸ்ரீநிவாசரிடம் சென்று தாயாய் இருந்து அவருக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து வந்தாள். ஸ்ரீநிவாசர் சேஷாத்திரி மலையை வந்தடைந்த பின்பு வினோதங்கள் பலவும் செய்து வந்தார்.

அச்சமயம் ராஜகுமாரி ஒருவரைக் கண்டு அவள் மேல் காதல் கொண்டார். பிறகு தேவர்கள் அனைவரின் வாழ்த்துக்களுடன் திருமணம் செய்து கொண்டார் என சூதமகரிஷி சொல்ல, சௌனகாதி முனிவர்கள் அந்தக் கதையையும் தங்களுக்குக் கூறுமாறு கேட்டுக் கொண் டார்கள். சூத மகரிஷியும் அக்கதையை அவர்களுக்குக் கூறத் தொடங்கினார்.

துவாபர யுகம் முடிவிலும் கலியுகத்தின் தொடக்கத்திலும் இந்த பூமியில் விக்கிரமாதித் தரர்கள் மிக்க வீரம் உடையவர்களாய் இருந்து மக்களின் தேவைகளை அறிந்து நல்ல முறையில் ஆண்டு வந்தார்கள். அதன் பிறகு சந்திரகுலத்தை சேர்ந்தவர்களான பாண்டவ வம்சத்தினர் ஆண்டு வந்தனர். அவர்களில் ஒருவர் தன் வாரிசான சுதர்மனுக்கு முடி சூட்டினார். சுதர்மன் ஆட்சி செய்து வருகையில் அவனுக்கு ஆகாச ராஜன் எனும் மகன் பிறந்தான். இவன் மாதவன் என்ற பெயருடையவன். வினைப் பயனாக பல பாவங்களைச் செய்து பிறகு சேஷாத்திரி மலையில் உள்ள ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி பின் தன் சரீரத் தியாகம் செய்தவன். அவனே சுதர்மனுக்கு மகனாகப் பிறந்தான்.

அதேபோல முன் ஜென்மத்தில் மாதவனின் தர்மபத்தினியான சந்திரரேகா தன் பதியாகிய மாதவனை நினைத்தபடி சரீரத் தியாகம் செய்ததால் தரணிதேவியாகப் பிறப்பெடுத்தாள். சுதர்மன் அவளை ஆகாசராஜனுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

ஒருநாள் சுதர்மராஜா வேட்டையாட காட்டுக்குச் சென்றார். வேட்டையாடிய பின் களைப்பு தீர ஓரிடத்தில் ஓய்வெடுக்க ஒதுங்கி நின்றார். அங்கே ஒரு நாகக்கன்னி ஒருவளைப் பார்த்தான். அவள் அழகுக்கு அடிமையானான். தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டான். ஆனால், அதற்கு நாகக்கன்னி, "ராஜா

நீயோ மானிடன் நானோ நாக கன்னிகை நம் இருவருக்கும் தாம்பத்தியம் எவ்வாறு சாத்தியம்? இது முடியாத காரியம். எனவே நீ உன் வழியைப் பார்த்துக் கொண்டு செல்வாயாக'' என்றாள். ஆனால், சுதர்மன் அவளைப் பின் தொடர்ந்தான்.

அவன், பின் தொடர்வதை அறிந்த நாகக்கன்னி, "நீ யார்? உன் குலம் கோத்திரம் என்ன?'' என்று கேட்டாள். அதற்கு பதில் கூறிய ராஜாவை "ராஜா நீ என்னை திருமணம் செய்து கொண்டால், உனக்கு பிறக்கும் மகன் நாகலோக வாசியாவான். உன் தந்தை யார்? எனக் கேட்டால் அவனுக்கு என்னவென்று சொல்வது?" என்று கேட்டாள்.

சுதர்மன் உடனே "உனக்கு மகன் பிறந்து, யாருடைய மகன் எனக் கேள்வி கேட்டால் அவனிடம் என் பெயரைச் சொல்லி என்னிடம் அனுப்பி வைத்து விடு. நான் அவனுக்கு என் ராஜ்ஜியத்தில் பாதியைக் கொடுக்கிறேன்'' என்று கூறி, அழகான மோதிரம் ஒன்றை அவள் கையில் கொடுத்து அவளுடன் சேர்ந்தான். பின், நாகக் கன்னிகை ராஜாவிற்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தாள்.

சில நாட்கள் கழிந்து நாகக்கன்னிகை கருப்பவதி ஆனாள். நாகலோகம் சென்றாள். ஆனால் நாக ராஜன் தன் மகளை ஒரு வார்த்தை எதையும் கேட்க வில்லை. எல்லாம் தெரிந்தும் ஏதும் அறியாதவனாக இருந்தான். அந்த நாகக்கன்னி ஒரு ஆண்மகனை பெற்றெடுத்தாள். அக்குழந்தை சக்கரவர்த்தியைப் போன்று அழகுக்கு அழகு சேர்க்கும் விதமாக அனைவரையும் கவரும் வண்ணமாக விளங்கினான்.

குமாரன் வளர்ந்து பெரியவன் ஆனான். அவன் ஒரு நாள் தன் தாயைப் பார்த்து, "என் தந்தை யார்?" என வினவினான். அதற்கு அவள், "உன் தந்தை சாதாரணமானவர் அல்லர். அவர் ஒரு அரசன். அவர் பெயர் சுதர்ம ராஜன். நீ அச்சமின்றி அவரிடம் செல்லலாம். அது மட்டுமல்ல அவர் தன் ராஜ்ஜியத்தில் சரிபாதியை உனக்கு கொடுப்பார். அதை கொண்டு நீ அரசு அதிகாரம் பெற்று மகிழ்ச்சியாக அரசு ஆள்வாயாக! இனி நீ இங்கு இருப்பது எதற்கு? பூலோகம் செல்வாயாக!" எனக்கூறி, அன்று ஒரு நாள் சுதர்மன் தன்னிடம் கொடுத்த அந்த அழகான மோதிரத்தை தன் மகனிடம் கொடுத்தாள்.

அந்த மோதிரத்தைப் பெற்றுக் கொண்ட சுதர்மன் கடைசியாக தன் தாயை வணங்கினான். அவள் "தீர்க்க ஆயுளோடும் ஹரி பக்தனாகவும் இருந்து சக்கரவர்த்தியாக நீடூழி வாழ்வாயாக!" என்று வாழ்த்தினாள். பிறகு மகனுக்கு பிரியாவிடை கொடுத்து அனுப்பிய துயரத்தோடு நாகலோகம் வந்தடைந்தாள்.

பெருமை அறிவோம்...

## கெடுப்பது சோர்வு

புதிய ஆத்திசூடி 19




ஒவ்வொருவருக்கும் பகைவர்கள் வெளியிலிருந்து வருவதில்லை. அவரவர் உள்ளிருக்கும் சோம்பல்தான் முதல் எதிரி. முதல் பகைவன். தனது ஆத்திசூடியில் ஏற்கனவே சோம்பலை நீக்குவதற்காக "ஓய்தல் ஒழி" என்று சொன்ன பாரதி, மீண்டும் "சோம்பல் கெடுதி" என்று ஆணித்தரமாகக் கூறுகிறார்.

எந்த ஒரு செயலைத் தொடங்கும் போதே உற்சாகத்துடன் தொடங்கவேண்டும். ஆரம்பத் திலேயே மனத்தளர்ச்சி அடைந்தால் அந்த செயல் முழுமை பெறாமல் சோர்வடைந்து போன நம்மைப் போல் தொய்ந்து விடும். வேலைப் பளுவைக் குறித்த மலைப்பைத் தூர எறிந்து விட்டு, இது எளிய வேலைதான் என்று ஆரம்பத்திலேயே உற்சாகத்துடன் ஒரு செயலைச் செய்யத் தொடங்கினால் எளிதாகவும், இனிதாகவும் அது நிறைவேறும். மலை போன்ற பெரிய செயலையும் சோம்பல் இல்லாத மனம் இருந்தால் எளிதாக முடித்து விடலாம்.

மனிதன் முன்னேறாமல் இருப்பதற்குக் காரணம் சோம்பல்தான். இன்று செய்து முடிக்க வேண்டிய வேலைகளை, நாளை, நாளை என்று. தள்ளிப் போட தள்ளிப் போட வெற்றி நம்மை விட்டுத் தள்ளிப் போய்விடும். சோம்பல் உடையவனுக்குக் கடுகு கூட பாரம் தான். ஆகவே, குழந்தைகளே! சோர்வுக்கு இடம் கொடாமல், உங்கள் வேலைகளை அன்றன்றே முடித்து வெற்றியாளர் ஆகுங்கள். 'கெடுப்பது சோர்வு' என்பதை மனதில் நிறுத்திக் கொண்டு இறைவனின் அருளால் இலக்கை அடையுங்கள். வாழ்க வளத்துடன்.

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938



திருமலை ஆனந்த நிலையத்திலுள்ள ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமியின் மூல மூர்த்திக்கு தினமும் மூன்று முறை அர்ச்சனை நடைபெறுகிறது. அதிகாலையில் தோமாலை சேவை முடிந்தவுடன் அஷ்டோத்திர சஹஸ்ர (1008) நாமங்களுடன் சஹஸ்ர நாமார்ச்சனை நடைபெறும். அதன் பிறகு மதியமும், மீண்டும் இரவும் அஷ்டோத்திர சத (108) நாமங்களுடன் அர்ச்சனை நடைபெறும். மேற்கண்ட அர்ச்சனைகள் நடக்கும் ஒவ்வொரு முறையும், ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் வக்ஷ ஸ்தலத்தில் (திருமார்பில்) வீற்றிருக்கும் ஸ்ரீ மஹாலக்ஷ்மித்தாயாருக்கு வராஹ புராணத்திலுள்ள சதுர்விம்சதி (24) நாமங்களுடன் அர்ச்சனை செய்யப்படுகிறது. திருச்சானூரிலும் இந்த நாமங்களைக் கொண்டே அர்ச்சனை செய்கிறார்கள். 'ஸப்தகிரி' வாசகர்களுக்காக தாயாரின் சதுர்விம்சதி நாமங்களை, வரவிருக்கும் திருச்சானூர் ஸ்ரீ பத்மாவதித் தாயாரின் பிரம்மோற்சவத்தை முன்னிட்டு முன்னதாகவே வழங்குகிறோம்.

## ஸ்ரீ மஹாலக்ஷ்மித் தாயார் சதுர்விம்சதி நாமங்கள்

1. ஓம் ஸ்ரியை நம:
2. ஓம் லோகதாத்ர்யை நம:
3. ஓம் பிரம்மமாத்ரே நம:
4. ஓம் பத்மநேத்ராயை நம:
5. ஓம் பத்மமுக்யை நம:
6. ஓம் பிரசன்னமுகபத்மாயை நம:
7. ஓம் பத்மகாந்த்யை நம:
8. ஓம் பில்வவனஸ்தாயை நம:
9. ஓம் விஷ்ணுபத்ன்யை நம:
10. ஓம் விசித்ரக்ஷௌமதாரிண்யை நம:
11. ஓம் ப்ருதுஸ்ரோண்யை நம:
12. ஓம் பக்வபில்வபலாபீனதுங்கஸ்தந்யை நம:
13. ஓம் சுரக்த பத்ம பத்ராப கரபாததலாயை நம:
14. ஓம் சுபாயை நம:
15. ஓம் சரத்நாங்கதகேயூர காஞ்சீநூபுர ஷோபிதாயை நம:
16. ஓம் யக்ஷி கர்தம ஸம்லிப்த சர்வாங்காயை நம:
17. ஓம் கடகோஜ்ஜ்வலாயை நம:
18. ஓம் மாங்கல்யாபரணைஸ்சித்ரைர்முக்தா ஹாரைர் விபூஷிதாயை நம:
19. ஓம் தாடங்கைரவதம்சைஸ்ச சோபமான முகாம்புஜாயை நம:
20. ஓம் பத்மஹஸ்தாயை நம:
21. ஓம் ஹரிவல்லபாயை நம:
22. ஓம் ருக்யஜுஸ்ஸாமரூபாயை நம:
23. ஓம் வித்யாயை நம:
24. ஓம் அப்திஜாயை நம:

ஏவம் சதுர்விம்சதி நாமபி: பில்வபத்ரை: லக்ஷ்ம்யர்சனம் குர்யாத் ।
தேன சர்வாபீஷ்டசித்திர்பவதி ।।
இதி சதுர்விம்சதி நாமாவளி:





# திருச்சானூர்
## ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவம்
**05-12-2026 முதல் 14-12-2026 வரை**



திருமலை திருப்பதி தேவஸ்தானம்



05-12-2026, சனிக்கிழமை
பகல்
இலக்ஷ குங்குமார்ச்சனை



05-12-2026, சனிக்கிழமை
இரவு
அங்குரார்ப்பணம்



06-12- 2026, ஞாயிற்றுக்கிழமை
பகல்
துவஜாரோஹணம்



06-12-2026, ஞாயிற்றுக்கிழமை
இரவு
சிறிய சேஷ வாகனம்



07-12-2026, திங்கட்கிழமை
பகல்
பெரிய சேஷவாகனம்



07-12-2026, திங்கட்கிழமை
இரவு
ஹம்ஸ வாகனம்



08-12-2026, செவ்வாய்க்கிழமை
பகல்
முத்துப்பந்தல் வாகனம்



08-12-2026, செவ்வாய்க்கிழமை
இரவு
சிம்ம வாகனம்



09-12-2026, புதன் கிழமை
பகல்
கல்ப விருக்ஷ வாகனம்



09-12-2026, புதன் கிழமை
இரவு
ஹனுமத் வாகனம்



10-12-2026, வியாழக்கிழமை
பகல்
பல்லக்கு உத்ஸவம்



10-12-2026, வியாழக்கிழமை
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்



11-12-2026, வெள்ளிக்கிழமை
பகல் :சர்வபூபால வாகனம்
மாலை : தங்கத்தேர்





11-12-2026, வெள்ளிக்கிழமை
இரவு : கருட சேவை



12-12-2026, சனிக்கிழமை
பகல்
சூரியப்பிரபை வாகனம்



12-12-2026, சனிக்கிழமை
இரவு
சந்திரப்பிரபை வாகனம்



13-12-2026, ஞாயிற்றுக்கிழமை
பகல்
திருத்தேர்



13-12-2026, ஞாயிற்றுக்கிழமை
இரவு
குதிரை வாகனம்



14-12-2026, திங்கட்கிழமை
பகல்
சக்கரஸ்நானம், பஞ்சமி தீர்த்தம்.



14-12-2026, திங்கட்கிழமை
இரவு
துவஜாவரோஹணம்



15-12-2026, செவ்வாய்க்கிழமை
பகல்
புஷ்பயாகம்



23-09-2026 முதல் 26-09-2026 வரை திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு நடைபெற்ற திருபவித்ரோத்ஸவத் திருக்காட்சி. இந்நிகழ்ச்சியில் பங்குக்கொண்ட தி.தி.தே. இணைச் செயலாட்சித் தலைவர் டாக்டர் ஏ. சரத், ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்



24-09-2026 அன்று உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி திருமலை மாட வீதிகளில் அப்பிரதக்ஷிணமாக திருவீதி உலா கண்டு, அனந்தாழ்வான் தோட்டத்திற்கு எழுந்தருளினார். அங்கு சிறப்பான முறையில் ஆராதனைகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. எம். ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்.




2026 ஆம் ஆண்டிற்கான தூய்மை ஆந்திரா விருது தி.தி.தேவஸ்தானத்திற்குட்பட்ட திருப்பதி அருகில் உள்ள அப்பலாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்திற்கு 02-10-2026 அன்று திருப்பதி மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டபோது



03-10-2026 அன்று பூரட்டாசிமாத 3வது சனிக்கிழமையை முன்னிட்டு தி.தி.தே. நிர்வாகக் கட்டிடத்தில் திருமாவிளக்கு பூஜையில் பங்கு கொண்ட தி.தி.தே. இணைச் செயலாட்சித் தலைவர் (எச்.& இ) திரு. பி.கோபிநாத் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்




இந்த ஆலயங்களின் கூடுதல் விவரங்களை www.tirumala.org (or) ttdevasthanams.ap.gov.in என்ற இணைய தளம் வாயிலாக அறியலாம்.

***திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.***

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

## ஸ்ரீ பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - அவுலப் பள்ளி, சோமலா

ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், 12–12–2020 அன்று தி.தி.தே. தன் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தது.

இத்தலப் பெருமான் சுயம்பு மூர்த்தி ஆவார். புராணத்தின்படி, அவுலப் பள்ளியில் பருத்தி சாக்குப் பையில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி தோன்றினார். இத்திருக்கோயில் கிழக்கு நோக்கியபடி மிகவும் விசாலமாகவும், பழமையான கோயிலின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

திருமலையில் உள்ள ஸ்வாமியைப் போலவே, கடிவரத ஹஸ்தங்களுடன், சங்கு, சக்கரங்கள் ஏந்தி, ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் காட்சி தருகிறார். ஆழ்வார்கள், சக்கரத்தாழ்வார், கருடாழ்வார் என எழுந்தருளுகின்றனர்.

தனிச்சன்னதியில் ஸ்ரீ லட்சுமி தேவி அமர்ந்த நிலையில், திருக்கரங்களில் மலர்கள் ஏந்தி, வரத, அபய ஹஸ்தங்களுடன் காட்சியளிக்கிறார். பாஞ்ச ராத்திர ஆகமப்படி வழிபாடு நடைபெறுகிறது.

### அமைவிடம்

திருப்பதி, பீலேர் மற்றும் புங்கனூரிலிருந்து பேருந்துகள் உள்ளன. சோமலாவிலிருந்து கோயிலை அடைய ஆட்டோக்களும் உள்ளன.

## ஸ்ரீ பாலாஜி திருக்கோயில் - அண்டகாப் பள்ளி

கோயில் கட்டுமானப் பணிகள் 2013ஆம் ஆண்டு க்ராண்டி மல்லிகார்ஜுனராவ் (ஜி.எம்.ஆர்) குடும்பத்தினரால் தொடங்கப்பட்டன. 01.04.2018 அன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திரிதண்டி சின்னஜீயர் சுவாமிகளால் மகாசம்ப்ரோக்ஷணம், விக்ரஹ பிரதிஷ்டை நடத்தப் பட்டது.

இக்கோயில் 17.03.2023 அன்று தி.தி.தே. நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. இக்கோயிலில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி மூல மூர்த்தியாக உள்ளார். வலதுபுறத்தில் பத்மாவதித் தாயார் சன்னதியும், இடது புறத்தில் ஆண்டாள்







தாயாரின் சன்னதியும் அமைந்துள்ளது. பாஞ்ச ராத்திர ஆகமம் படி பூஜைகள் நடத்தப் படுகின்றன.

**அமைவிடம்**

பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் கோயில் அமைந்துள்ளது. பொண்டூரில் இருந்து 23 கி.மீ. மற்றும் சீபுருபள்ளி ரயில் நிலையத்திலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

## ஸ்ரீ பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - மங்களம் பேட்டை

முற்காலத்தில், சித்தூர் மாவட்டம் "எகிலி தோரா" என்பவரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது, அவரது குடும்பத்தில் பிறவியிலேயே பார்வையற்ற வராக இருந்த எல்லப்பநாயுடு தோரா மற்றும் அவரது இளைய சகோதரர் ஆகியோர் நிர்வாகத்தை கவனித்து வந்தனர்.

எல்லப்பநாயுடு ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் தீவிர பக்தராக இருந்தார். தினமும் ஏழு மைல்கள் குதிரையில் பயணம் செய்து திருமலை சென்று இறைவனை வழிபட்டு, ஸ்வாமி! எனக்கு கண் பார்வையை அருள வேண்டும். எனக்கு பார்வை கிடைத்த உடன், திருமலையில் உள்ளது போன்றே எனது கிராமத்திலும் கோயிலைக் கட்டுவேன் என்று வேண்டிக் கொண்டார்.

தயை குணம் கொண்ட திருவேங்கடமுடையானும் தனது பக்தருக்கு கண் பார்வையை அருளினார். எல்லப்ப நாயுடுவும் திருமலையைப் போல நான்கு மாட வீதிகளையும் அமைத்து இங்கு கோயிலைக் கட்டினார். ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் பிரதிஷ்டை செய்து, "ஸ்ரீ பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி" என்று பெயரிட்டார். பூஜைகளுக்காக பல மானியங்கள் மற்றும் நிலங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. இவ்வாலயம் 30-11-2020 அன்று தி.தி.தே. நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**அமைவிடம்**

திருப்பதியிலிருந்து 55 கி.மீ. தொலைவிலும், பீலேரு இரயில் நிலையத்திலிருந்து 20 கி.மீ. தொலைவிலும், சித்தூரிலிருந்து 51 கி.மீ. தொலைவிலும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

## ஸ்ரீ வரத வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - ஆலத்தூர், கார்வேடிநகரம்

கோயில் வரலாற்றின்படி, சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அக்காலத்தில் ஆட்சி செய்த மன்னரின் கனவில் ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி தோன்றி, குசஸ்தலை நதியில் சிலை வடிவில் தான் இருப்பதாகத் தெரிவித்தார். அதன்படி, மறுநாள் மன்னர் குசஸ்தலை நதிக்குச் சென்று தேடியபோது, அங்கு ஸ்வாமியின் சிலை கிடைத்தது. அந்தச் சிலையை எடுத்துச் சென்று கோயிலைக் கட்டினார். குசஸ்தலை நதியிலிருந்து ஸ்வாமி தோன்றி பக்தர்களின் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுவதால், வரத வேங்கடேஸ்வர ஸ்வாமி எனும் திருநாமத்தால் அழைக்கப்படுகிறார். துன்பத்தில் இருக்கும் பக்தர்களிடம் கருணையுடன் இருந்து, அவர்களுக்கு தாராளமாக அருள்புரிகிறார்.

**அமைவிடம்**

இத்திருக்கோயில் திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டிலிருந்து (6 கி.மீ) கார்வேடி நகரம் செல்லும் சாலையில், கிருஷ்ணாபுரம் (அம்மபள்ளி அணை) நீர்தேக்கத்திற்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. சென்னையில் இருந்து 100 கி.மீ. தொலைவிலும், திருப்பதியில் இருந்து 56 கி.மீ. தொலைவிலும், புத்தூரிலிருந்து 17 கி.மீ. தொலை

விலும், நகரியில் இருந்து 23 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

### ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - கலிகிரிகொண்டா

பழமையான இத்திருக்கோயில் புராண முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கோயில் வரலாற்றின் படி, மகாலட்சுமி தேவி வைகுண்டத்தை விட்டு வெளியேறிய பிறகு, மகாலட்சுமி தேவியைத் தேடி எம்பெருமான் கலிகிரிகொண்டாவை அடைந்து, 60 அடி உயரமான புற்றின் கீழ் தவம் மேற்கொண்டார்.

காளி என்ற அரக்கன் அந்தத் தவத்தைத் தடுக்க முயன்றபோது, ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி தனது இடது காலால் அந்த அரக்கனை பாதாள லோகத்திற்கு அழுத்தினார். இன்றும் நாம் ஸ்வாமி திருவடிகளைத் தரிசிக்கலாம்.

இங்குள்ள மூலவர் சாளக்கிராமக் கல்லால் செய்யப்பட்டவர். இக்கோயில் சுமார் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. காளி எனும் அரக்கனை அழித்ததால் இத்தலம் கலிகிரிகொண்டா என்று அழைக்கப்படுகிறது. பக்தர்களால் சந்தான வரத ஸ்வாமி என்றும் வழிபடப்படுகிறார்.

### அமைவிடம்

திருப்பதியிலிருந்து 67 கி.மீ. தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

### ஸ்ரீ கல்யாண வேங்கடரமண ஸ்வாமி திருக்கோயில்- புங்கனூர்

புங்கனூர் ஆட்சியாளர் சுகுரு முத்தப்ப நாயுடு, இம்மடி சங்கரய்யா ஆகியோரால் 1817–ல் இக்கோயில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

புங்கனூரில் பெரும்பாண்மையாக சைவர்கள் வசித்தாலும், இப்பகுதி முதலில் வைணவத் தலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. தொடர் ஆண்டு 804 முதல் 908 வரை வைணவம் செழித்தது. அக்காலத்தில் புங்கனூர் அடர்ந்த காடாக இருந்தது.

தென்னிந்தியா முழுவதிலிருந்தும் வைணவ பக்தர்கள் மாணிக்ய வரத ஸ்வாமியின் தரிசனத்திற் காக புங்கனூரில் குடியேறினர்.



காலப்போக்கில் சைவ ஆட்சியாளர்களான சுகுட்டூர் வம்சத்தினரின் ஆட்சியில் பல சிவன் கோயில் களும் நகரில் உருவாயின. இதன் தொடர்ச்சியாக, வைணவர்களின் வேண்டு கோளுக்கிணங்க, புங்கா புரி ஆட்சியாளர் இம்மடி சிக்கராய யசோவந்த பகதூர், நகரின் மையப் பகுதியில் திருமலை ஸ்ரீவேங்கடரமண ஸ்வாமிக் காக கோயில் ஒன்றைக் கட்டினார்.

### அமைவிடம்

திருப்பதியிலிருந்து சுமார் 51 கி.மீ. தொலைவி லும், பீலேரிலிருந்து சுமார் 60 கி.மீ. தொலைவிலும் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

### ஸ்ரீ பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில்- போரகமண்டா

ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு புங்கனூர் ஜமீன்தாரர்களால் கட்டப்பட்டது.

ஸ்வாமி, தாயார், பக்தாஞ்சநேயர், கருடன் மற்றும் விஷ்வக்சேனரின் சிலைகள் போரகமண்டா கிராமத்தின் நான்கு வீதிகளில் கிராமத் திருவிழாவாக எடுத்துச் செல்லப்பட்டன. இருப்பினும், புங்கனூர் ஜமீன்தார்கள் தற்போதைய கோயிலில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் கோயில் கட்ட முடிவு செய்திருந்தபோதிலும், ஸ்வாமியின் தேர் தற்போது கோயில் அமைந்துள்ள இடத்திலேயே நின்று விட்டது.



கிராம மக்கள் எவ்வளவு முயன்றும் தேர் நகராததால் சிலைகள் கீழே இறக்கப்பட, தேர் நகரத் தொடங்கியது. இதை ஸ்வாமியின் விருப்பமாகக் கருதி, கிராம மக்களும் ஜமீன்தாரர்களும் தற்போதைய கோயிலை இவ்விடத்திலேயே கட்டினர்.

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது. பிரம்மோற்சவத்தின்போது வைகாசி பௌர்ணமி அன்று ஸ்வாமிக்கு கல்யாணோத்ஸவம் நடத்தப்படுகிறது. குறிப்பாக கல்யாணோத்சவ நாளில் கோயில் கோபுரத்தின் முன்புறம் உள்ள தீபஸ்தம்பத்தில் விளக்கு ஏற்றப்படுகிறது. அந்த விளக்கு பகல் மற்றும் இரவு முழுவதும் எரிந்தால் அந்த ஆண்டு மழை வளமாகவும், பயிர்கள் செழிப்பாகவும் இருக்கும் என்று கிராம மக்கள் நம்புகின்றனர்.ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரி நாட்களில் அனுமனுக்கு வெற்றிலை பூஜை நடைபெறுகிறது.

**அமைவிடம்**

திருப்பதியிலிருந்து சுமார் 73 கி.மீ. தொலைவிலும், பீலேரிலிருந்து சுமார் 23 கி.மீ. தொலைவிலும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - நிம்மகூர்**

கோயிலின் கட்டுமானப் பணிகள் 1987ஆம் ஆண்டு நிறைவடைந்த பின் அன்றைய ஆந்திர மாநில முதலவர் திரு. என்.டி. ராமாராவ் அவர்களால் திருக்கோயில் திறந்து வைக்கப்பட்டது.

இத்திருக்கோயில் 29.04.2018 அன்று விஜயவாடாவிலுள்ள ஸ்ரீதுர்கா மல்லேஸ்வர ஸ்வாமி கோயில் நிர்வாகத்திடமிருந்து தி.தி. தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது.

**அமைவிடம்**

விஜயவாடா–மசீலிப்பட்டிணம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவிலும், விஜயவாடாவிலிருந்து சுமார் 55 கி.மீ. தொலைவிலும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - உபமாகா**

இக்கோயிலின் முக்கியத் திருவிழா கல்யாண உத்சவம் ஆகும். இது மார்ச் மாதத்தில், பால்குண (பங்குனி) மாதத்தில் நடத்தப்படுகிறது. சுமார் ஒரு லட்சம் பக்தர்கள் ஸ்வாமியின் கல்யாணத்தில் கலந்து கொள்கின்றனர். வருடாந்திர பிரம்மோற்சவம், தனுர்மாசம் அத்யயனோத்சவம், திருநட்சத்திர விழாக்களும் நடத்தப்படுகின்றன.

## 2026, டிசம்பர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 05 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் லக்ஷ குங்குமார்ச்சனை. |
| 06–14 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவம். 06 தன்வந்தரி ஜெயந்தி. |
| 06 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் துவஜரோஹணம். |
| 10 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் யானை வாகனம். |
| 14 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பஞ்சமி தீர்த்தம், சக்கர ஸ்நானம். |
| 15 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் புஷ்ப யாகம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் சுப்ரமண்ய சஷ்டி. |
| 16 | மார்கழி மாதம் ஆரம்பம். |
| 19–23 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 20 | வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீகீதா ஜெயந்தி. |
| 21 | ஸ்ரீஸ்வாமி புஷ்கரணியில் தீர்த்த முக்கோட்டி. |
| 24 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆருத்ரா தரிசன மஹோத்ஸவம். |

புராணத்தின்படி, கிருத யுகத்தில் நாரத முனிவரால் (தேவ பிரதிஷ்டை) இக்கோயில் நிறுவப்பட்டது. பின்னர் கண்ட்ரேகுலா மன்னரும் பித்தாபுரம் ஜமீன்தாரருமான ஸ்ரீகிருஷ்ண பூபாலுடு, 6ஆம் நூற்றாண்டில் இக்கோயிலை புனரமைத்ததாகக் கூறப்படுகிறது. இக்கோயில் அமைந்து உள்ள இடம் கருடாத்ரி எனும் மலைப்பகுதியாகும். ஸ்வாமி வடக்கு நோக்கி குதிரையின் மீது அமர்ந்த நிலையில், லட்சுமி தேவியுடன் காட்சி தருகிறார்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்ரீமந்நாராயண திரிதண்டி பெத்த ஜீயர் சுவாமி கள் 1964ஆம் ஆண்டு ராமஸ்தூபம் ஒன்றை நிறுவினார். இந்தியாவில் 108 ராமஸ்தூபங்களில் இதுவும் ஒன்றாகும்.

இக்கோயிலின் வரலாறு பிரம்ம வைவர்த்த புராணத் தில், கருடாசல மாகாத்மியம் பகுதியில் விளக்கப்பட்டு உள்ளது. இத்தலம் வைஷ்ணவ அபிமான திருத்தலங் களில் ஒன்றாகும்.

மலையின் அடிவாரத்தில் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி கோயில் உள்ளது. இவரே இக்கோயிலின் க்ஷேத்திர பாலகர் ஆவார்.

துவாபர யுகத்தின் முடிவில் முனிவர்கள் முக்திக்காக தீவிரமாகப் பிரார்த்தனை செய்ததாகப் புராணம் கூறுகிறது. கருடன், ஸ்ரீகிருஷ்ணரிடம் தனது தோள்களில் தலை வைத்து இளைப்பாறுமாறு வேண்டினார். தனது வாக்கைக் காப்பாற்றுவதற்காக ஸ்வாமியும் உபமாகா கிராமத்தில் உள்ள கருட மலை மீது எழுந்தருளினார்.


துவாபர யுகத்தின் முடிவில் முனிவர்கள் முக்திக்காக தீவிரமாகப் பிரார்த்தனை செய்தனர். கருடனின் வேண்டு கோளின்படி, ஸ்ரீகிருஷ்ணர் தனது சிரஸ்ஸில் நிரந்தரமாகத் தங்கிட சம்மதித்தார். அந்த வாக்கை நிறைவேற்ற, ஸ்வாமி யும் உபமாகா கிராமத்தில் உள்ள கருட பர்வதத்தில் எழுந்தருளினார். தினமும் பூஜை மற்றும் நைவேத்தியம் செய்த கால்நடை மேய்ப்பர்கள் மூலம் இறைவனின் இருப்பிடம் பொதுமக்களுக்குத் தெரியவந்தது.

**அமைவிடம்**

ராஜமுந்திரி, காக்கிநாடா மற்றும் விசாப்பட்டிணத் திலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. நக்கம்பள்ளி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 800 மீட்டர் தொலைவி லும், நற்சிபட்டணத்திலிருந்து 4 கி.மீ.தொலைவிலும், தூனி இரயில் நிலையத்திலிருந்து 20 கி.மீ. தொலைவிலும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

அண்மைக் காலமாக திருமலைக்கு நடந்து வரும் பக்தர்களிடையே இதய நோய் சம்மந்தப்பட்ட நோயாளிகளே அதிகமாக இடம் பெறுகின்றனர். இதன் காரணமாக பக்தர்களுக்கு தி.தி.தே. சில ஆலோசனைகளை வழங்கி வருகிறது. பக்தர்கள் தங்களின் ஆரோக்கிய நலனைக் காத்திட பின்வரும் ஆலோசனைகளைக் கடைபிடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- 60 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, வலிப்பு, கீல்வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப் பட்டோர் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.
- இதயத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டவர்கள், உடல் பருமனானவர்கள் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.
- மலை ஏறும்போது ஏற்படுகின்ற மன அழுத்தம் மற்றும் மிக உயரத்தில் குறை வான ஆக்சிஜன் செறிவும் இதய பாதிப்பு மற்றும் ஆஸ்துமாவை மேலும் மோசமாக்கலாம்.
- நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் தாங்கள் வழக்கமாகப் பயன் படுத்தும் மருந்துகளைத் தவறாமல் தங்களுடன் கொண்டு வருதல் வேண்டும்.
- மருத்துவ உதவி தேவைப்படும் பட்சத்தில் அலிபிரி நடைபாதையில் உள்ள படி எண். 1500, காலி கோபுரம் மற்றும் இராமானுஜர் சன்னதி அருகில் உள்ள மருத்துவ மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- திருமலையில் 24/7மணி நேரமும் அஸ்வினி மருத்துவமனை/முதலுதவி மையங்கள் செயல்படுகின்றன.
- நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களுக்கு அவசர டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சைக்கு திருப்பதி ஸ்விம்ஸ் மருத்துவமனையும் உள்ளது.






திருவதரி,
பத்ரிவிஷால்,
பத்ரிநாத்,
பத்ரிகாச்ரமம்

# திருப்பதரியாச்ரமம்

**– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.**

*ஆகஸ்ட் மாத இதழின் தொடர்ச்சி...*

**சிறப்புகள்**

| | |
|---|---|
| பெருமாள் | : பத்ரி நாராயணப் பெருமாள் (கிழக்கு நோக்கிய அமர்ந்த திருக்கோலம்). பகவான் ஆசார்யனாகவும், சிஷ்யனாக வும் பத்ரிகாச்ரமத்தில் சேவை சாதிக்கிறார். |
| தாயார் | : அரவிந்த வல்லித் தாயார். |
| விமானம் | : தப்த காஞ்சன விமானம். |
| தீர்த்தம் | : தப்தகுண்டத் தீர்த்தம். |
| தல விருக்ஷம் | : பத்ரி விருட்சம் (இலந்தை மரம்) |
| பிரத்யக்ஷம் | : நரன். |
| மங்களாசாஸனம் | : பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம் :**

பத்ரி நாராயணனின் திருக்கோயிலுக்கு அருகில் உள்ள பிரம்ம கபாலம் என்ற பாறையில், பித்ருக்களுக்கான பிண்டங்கள் வைக்கப்பெற்று, பித்ரு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. தீண்டியவர்களின் விரலைச் செயல் இழக்கச் செய்யும் குளிர்ச்சி மிகுந்த அலகநந்தாக் கரையில், கொதிக்கும் வெந்நீர் நிறைந்த தப்தகுண்டம், உலக வாழ்வில் இன்ப துன்பங்கள் மாறி மாறி வருவதை எடுத்துக்காட்டும் இந்த வெந்நீர் ஊற்றுக்கள், பத்ரி நாராயணனின் திருவடிவாரத்தில் இருந்து வருவதாகக் கூறுவர். ஒரு ஆண்டில், மே மாதம் முதல் அக்டோபர் முடிய ஆறு மாதங்கள்தான் பத்ரி நாராயணனின் சந்நதி திறந்திருக்கும், மற்றக் காலங்களில் பனி மூடிவிடும். ஆதலால் அப்போது எல்லாம் தேவபூஜை நடைபெறும். இத்திவ்ய தேசத்தில், நாராயணன் நரனுடன் இணைந்து, தவத்தில் மூழ்கி ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களில் ஸத்வத்தையே வளர்த்து, உயர்ந்த ஞானியர்க்கு உபதேசிப்பதாக கருட வாகன பண்டிதர், தமது திவ்ய சூரி சரிதையில் கூறுகிறார்.

*ஸோயம் விபுர் பதரிகாச்ரம ஸந்நவிஷ்ட:*
*நாராயணோ நர ஸகஸ் தபஸாம் நிவாஸ:।*
*ஸத்வாதரீ க்ருத ரஜஸ் தமஸாம் ரஷீணாம்*
*தத்வாவபோதம் அஸக்ருத்தநுதே சுபாங்கீ॥*

அதன் தமிழாக்கமான தமிழ்த் திவ்யசூரி சரிதையில் சொல்லப்படுவது:

*இப்பரந்தாமன்*
*வதரியில் நரனொடு அங்குஇணையா*
*வளம்படு தவத்தின் வைகி முற்குணமே*
*வளர்தர இரண்டையும் வாட்டி*
*உளம் பதம் தனதில் ஒன்றுற நோற்கும்*
*உத்தமற்கு உண்மை நாடொறும்*
*விளம்புறும் வண்ணம் வீற்றிருந் திருநாராயணன்*

*எதிர் இலாக் கனகன் தன்னை, இருகையாற்*
*பிளவு செய்தே சதரினால் இலங்கை*
*வேந்தன்றனைக் களைந்து அடித்து, குந்தி*
*சுதர்எலாம் உய்யத் தீய சுயோதனன் மடியச்*
*செய்த வதரி நாரணனாம் எம்கோன் மலர்ப்பதம்*
*வாழி வாழி*

– திவ்ய தேச வாழ்த்துப் பாசுரம்

**தியானச்லோகம்:**

*ப்ரக்யாதே பதரீவநே வ்யுபதிசந்தத்வம் நரஸ்ய ஸ்வயம்*
*ஸ்ரீமத் தத்வ விமாநமத்ய விலஸந் நாராயண: பத்மயா ।*
*ப்ராசீதிக்வாந: ஸதாசபதரீ தீர்த்தப்ரியோ யோவஸத்*
*தத்வஜ்ஞான மலப்ய மோக்ஷஜநகம் மஹ்யம் திசத் வத்யஸ:॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

*முற்ற மூத்துக் கோல் துணையா முன் அடி நோக்கி வளைந்து*
*இற்ற கால் போல் தள்ளி மெள்ள இருந்து அங்கு இளையாமுன்*
*பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடு*
*உயிரை வற்றவாங்கி உண்ட வாயான் வதரி வணங்குதுமே*

– திருமங்கையாழ்வார்

*தாட்கு அடிமை என்று தமை உணரார்க்கு எட்டு எழுத்தும்*
*கேட்க,வெளியிட்டு அருளும் கேசவனை வேட்கையோடு*
*போவது, அரிது ஆனாலும் போய்த்தொழுவோம்*
*நெஞ்சமே! மாவதரி யாச்சிர மத்து*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாசுரம்

**நாமாக்கள்:**

949. *ஓம் பீமபராக்ரம: நம:*
பகைவர்க்கு பயமளிக்கும் பராக்ரமம் உள்ளவன்.
*ஓம் ஸுதா: நம:*
அமிர்தம் கடையும் போது அவதரித்த அமிர்த மயமானவள்.

950. *ஓம் ஆதாரநிலய: நம:*
ப்ரஹ்லாதி பக்தர்கட்கு ஆதாரமானவன்.
*ஓம் ரக்ஷோக்நீ நம:*
அடியோர்களுக்குத் தீங்கு செய்யும் கொடியோரை அழிப்பவள்.

951. *ஓம் தாதா நம:*
உபதேசிக்கும் ஆசார்யன்.
*ஓம் அஜா: நம:*
கர்மபலன் எதுவும் இல்லாதவள்.

952. *ஓம் புஷ்பஹாய: நம:*
புஷ்ப மலர்ச்சி போன்று மிருது ஸ்வபாவம் உள்ளவன்.



## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

96. தென்னரங்கன் பொன்னடி, சடகோபன் பொன்னடி, இராமாநுஜன் பொன்னடி என்று கொண்டாடப்படும் ஆழ்வார், ஆசார்யர்கள் யாவர்?

சடகோபர், இராமாநுஜர், மணவாளமாமுனிகள்.

97. அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளிய க்ரந்தங்கள் யாவை? அதற்கு அழகான வ்யாக்யானத்தை க்ருபையுடன் எழுதிய ஆசார்ய ஸார்வபௌமர் யார்?

ஞான ஸாரம் மற்றும் ப்ரமேய ஸாரமாகும். வ்யாக்யானம் அருளியவர் மணவாள மாமுனிகள்.

98. திருமங்கையாழ்வாரின் அபராவதாரமாகக் கீர்த்தி பெற்ற ஆசார்யர் யார்? கண்ணன் எம்பெருமான் அம்சத்தில் அவதரித்த ஆசார்யர் திருநாமம் என்ன?

நம்பிள்ளை. பெரியவாச்சான் பிள்ளை.

99. பகவத் இராமாநுஜர் ப்ரபந்நபாகை தரித்து எழுந்தருளி இருக்கும் திவ்யதேசம் எது?

ஆழ்வார் திருநகரி.

100. லக்ஷ்மண ஸ்வாமி கலியுகத்தில் ராமாநுஜராக அவதரித்தார் என்றும், ராமசந்த்ரமூர்த்தி கூரத்தாழ்வானாக அவதரித்தார் என்றும் பெரியோர்கள் நிர்வாஹம். புனரவதாரத்தில் லக்ஷ்மணஸ்வாமி மணவாளமாமுனிகளாக அவதரித்தபோது, ராமசந்த்ரமூர்த்தி அம்சத் தில் அவதரித்த வரவரமுனியின் சீடர் யார்?

ஆழ்வார் திருநகரி, கோயில் கந்தாடை அண்ணன்.

**– தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**

*ஓம் அம்ருதா: நம:*

ஸ்வரூப, ஸ்வபாக விகாரம் இல்லாதவள்.

963. *ஓம் ப்ரஜாகர: நம:*

பக்தர்களுக்காக எப்போதும் காத்திருப்பவன்.

*ஓம் ரத்நாவளீ: நம:*

பகவானின் திருமார்பில் ரத்னஹாரம் போல் விளங்குபவள்.

954. *ஓம் ஊர்த்வக: நம:*

உயர்ந்த மஹாபுருஷன்.

## நூல் மதிப்புரை




**நூலின் பெயர் : மாணிக்கவாசகர்**

**ஆசிரியர் : பேராசிரியர் அரங்க இராமலிங்கம்.**

**தொடர்பு எண் : 98403 58301.**

**கிடைக்குமிடம் : முல்லை பதிப்பகம், 323/10, கதிரவன் காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை - 600 040.**

இந்நூல் மாணிக்கவாசகரின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சிறப்பாக சுருக்கமாக எடுத்துக் காட்டியுள்ளது. ஊனையும் உயிரையும் உருக்குவது. மாணிக்கவாசகரின் வாழ்வு, அவர் அருளிய பாடல்களை முழுமையாக உணர்ந்து கொள்ள இச்சிறுநூல் பெரிதும் பயன்படும்.

மாணிக்கவாசகரின் காலம் குறித்த தெளிவான தரவுகள் இந்நூலில் தரப்பெற்றுள்ளன. அவரது காலம் குறித்த பிற நூல்களும் பின் இணைப்பில் இணைக்கப்பெற்றுள்ளன. மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல சிவபெருமானே தம் திருக்கரங்களால் எழுதிய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் பற்றிப் புதுமையான அறிமுகம் தரபெற்றுள்ளன. நூலின் இறுதியில் திருவாசகத்தின் சிறப்புகளை உணர்த்தும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

மாணிக்கவாசகரையும், மாணிக்கவாசகத்தையும் உணர இந்நூல் வழி செய்யும் என்பது உறுதி. சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் அரங்க இராமலிங்கம் அவர்கள் இந்நூலைப் படைத்து உள்ளார்.

## நூல் மதிப்புரை




**நூலின் பெயர்:**

**ஆன்மீக, அதிசய, அற்புத, ஆச்சர்ய வினாவிடை.**

**ஆசிரியர்:**

**டாக்டர் திரு.ஆர்.பக்தவத்ஸலம்.**

**கிடைக்குமிடம் : ஜெயா பப்ளிகேஷன்ஸ், 2சி டால் பிளாக், பாம்ரா ஹவுஸ், போரூர் லிங்க் ரோடு, சென்னை-95.**

**விலை : ரூ.120/-**

**தொடர்பு எண் : 98401 59391.**

இன்றைய காலகட்டத்தில் பல தகவல்களை கூகுளின் மூலம் எளிதில் பெற முடியும் என்றாலும், குறிப்பிட்ட கேள்விகள் மட்டுமே ஒரு சமயத்தில் நம் மனதில் தோன்றும். மிகவும் சுவாரசியமான பல அரிய தகவல்களை மிகுந்த ஆர்வம் கொண்டு இந்நூல் ஆசிரியர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த வினாவிடை நூல் பலருக்கும் முக்கியமாக இள வயது மாணவர்களுக்கு உபயோகமான ஒன்றாகும்.

**- திரு.மகாதேவன், சென்னை.**

*ஓம் பாரதீ: நம:*

ராக, பாவ, தாளம் அறிந்தவள்.

955. *ஓம் ஸத்பதாசார: நம:*

அடியார்களை நல்வழியில் நடத்துபவன்.

*ஓம் இடா: நம:*

யாகஹவிஸ்ஸைப் போலத்தூய்மையானவள்

956. *ஓம் ப்ராணத்: நம:*

அஞ்ஞானிகளுக்கு ஞானம் அளிப்பவன்.

*ஓம் தீரதீ: நம:*

சரீர, ஆத்ம, ஆத்மவிவேக அறிவை அளிப்பவள்.

*ஸ்ரீமதே அரவிந்தவல்லீ நாயிகா ஸமேத*
*ஸ்ரீபதரீ நாராயண பர ப்ரம்மணே நம:*

குறிப்பு: இமாலயத்தில் ரிஷிகேஷ், தேவ ப்ரயாக், ஸ்ரீநகர், ருத்ரப்ரயாக், பீபுல்கோட், ஜோஷி மட் வழியே 275 கி.மீ தொலைவு. அலகாநந்தா நதிக்கரையில் இத்தலம் அமைந்துள்ளது.

*திவ்ய தேச தரிசனம் தொடரும்...*

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## தி.தி.தே. ஆலயங்களில்
## நவம்பர் மாத நிகழ்ச்சிகளின் விவரங்கள்

### ஜூப்லிஹில்ஸ் (ஐதராபாத்), ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 04-11-2026 | புதன் | --- | அங்குரார்ப்பணம். |
| 05-11-2026 | வியாழன் | பவித்ர பிரதிஷ்டை | |
| 06-11-2026 | வெள்ளி | பவித்ர சமர்ப்பணம் | |
| 07-11-2026 | சனி | பவித்ரோத்ஸவம் நிறைவு. | |

### நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 20-11-2026 | வெள்ளி | ஸ்ரீராம ஸ்வாமி | |
| 21-11-2026 | சனி | ஸ்ரீகிருஷ்ணர், ஆண்டாள் தாயார் | கார்த்திகை பௌர்ணமியில் |
| 22-11-2026 | ஞாயிறு | ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி | நடைபெறும். |
| 23-11-2026 | திங்கள் | ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி | |
| 24-11-2026 | செவ்வாய் | ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி | |

### நகரி ஸ்ரீ கரிய மாணிக்கஸ்வாமி பவித்ரோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 23-11-2026 | திங்கள் | --- | அங்குரார்ப்பணம். |
| 24-11-2026 | செவ்வாய் | பவித்ர சமர்ப்பணம், பூர்ணாஹுதி | கார்த்திகை பௌர்ணமியன்று நடைபெறும் |

### திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி லக்ஷபில்வார்ச்சனை

| | | | |
|---|---|---|---|
| 27-11-2026 | வெள்ளி | லக்ஷ பில்வார்ச்சனை | கார்த்திகை மாதத்தில் ஆருத்ரா நக்ஷத்திரத்தில் நடைபெறும். |

### நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 04-11-2026 | புதன் | -- | அங்குரார்ப்பணம் |
| 05-11-2026 | வியாழன் | பவித்ர சமர்ப்பணம், பூர்ணாஹுதி | கார்த்திக மாதம் நடைபெறும். |



அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# ஸ்ரீபராசர பட்டர்

**- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972**

ஆகஸ்ட் மாத இதழின் தொடர்ச்சி...

*(திருநெடுந்தாண்டகப்பொருளைச் செப்புமவன் வாழியே)* திருமங்கையாழ்வார் அருளிய ஆறு பிரபந்தங்களுள் திருநெடுந்தாண்டகம் இறுதியான ப்ரபந்தம் ஆகும். இப்பிரபந்தத்தில் ஆழ்வாருடைய அர்ச்சாவதார ஈடுபாட்டை மிகுதியாகக் காணலாம். முப்பது பாசுரங்கள் கொண்ட இந்த ப்ரபந்தம் ரஹஸ்யத்ரயத்தை விளக்குகிறது என்பர். முதல் பத்து திருமந்த்ர அர்த்தம், இரண்டாவது பத்து த்வயார்த்தம், மூன்றாவது பத்து சரமச் சுலோகார்த்தம் என்று பட்டர் நிர்வஹிப்பர். பட்டர் பெரும் கூட்டத் திருவோலக்கமாக எழுந்து அருளி நம் தர்சநத்தை நிர்வகித்து வந்தார்.

அப்போது ஒரு சமயம் ஒரு தீர்த்தவாஸி பிராம்மணன் வந்து பட்டரை சேவித்து அவருடைய வேதாந்தோபந்யாஸ ஸாமர்த்யத்தையும் கேட்டு, பட்டரே! மேல் நாட்டில் வேதாந்தி என்று ஒரு பெரிய வித்வான் இருக்கிறான். அவனுடைய வித்யையும் கோஷ்டியையும் போல உமக்கும் இருந்தது என்று சொன்னான். அதைக் கேட்ட பட்டர், அப்படியும் ஒரு வித்வான் உண்டோ என்ன, உண்டு என்று சொன்னான். பின்னர், அவன் மேல்நாட்டுக்குப்போய் வேதாந்தியிடம் உமக்கு ஒப்பானவராய் பட்டர் என்பான் ஒருவர் இரண்டாற்றுக்கும் நடுவே உள்ள திருவரங்கத்தில் எழுந்தருளி இருக்கிறார் என்றார்.

வேதாந்தியும் பட்டர் நமக்கு ஒப்பான வித்வானா? என்று கேட்க, அவனும், உம்மைக்காட்டிலும் அதிகர் பட்டர் என்று சொன்னான். வேதாந்தியும் அவருக்கு எந்த சாஸ்த்ரம் வரும் என்று கேட்க, பிராம்மணனும் சப்ததர்க்க பூர்வோத்தர மீமாம்ஸை தொடக்கமான எல்லா சாஸ்த்ரங்களும் பட்டருக்கு வரும் என்றான். இதனைக்கேட்டு வேதாந்தி திடுக்கிட்டு இருந்தான். பின்னர் அந்த பிராம்மணனும் பட்டரிடம் சென்று அவருடைய வைபவத்தையெல்லாம் வேதாந்தியிடம் சொன்னதாகக் கூறினான். பட்டரும் பொதுவாக எல்லா வித்வான்களுக்கும் தெரிந்த வேதாந்த சாஸ்த்ரங்களே தெரியும் என்று தப்பாமல் சொன்னாயே. திருநெடுந்தாண்டகம் வரும் என்று வேதாந்திக்குச் சொல்லாது இருந்தாயே என்று வெறுத்து அருளினார்.

உடனே அந்த பிராம்மணனும் மேல் நாட்டுக்குப் போய் வேதாந்தி இடம் இந்த விஷயத்தைச் சொல்ல, வேதாந்தியும் திருநெடுந்தாண்டகம் என்கிற சொல்லுக்கு பொருள் விளங்க வில்லையே. அவர் எப்படிப்பட்ட வித்வானோ என்று ஆச்சர்யப்பட்டு இருந்தார்.

பட்டரும் இராமாநுசர் நியமித்தபடி அந்த வேதாந்தியை நம் தர்சனத்தில் சேர வழிவகுக்க வேண்டும் என்று எண்ணி இருந்தார். பட்டரும் நம்பெருமாளிடம் விடை பெற்று மேல்நாட்டுக்குச்சென்றார். மேல்கோட்டை செல்லப்பிள்ளையை வழிபட்டு, அவர் அருள் கொண்டு, அனந்த

ஆழ்வானோடு பட்டர், வேதாந்தி இருந்த இடத்தை அடைந்தார். வேதாந்தியும் விசாரித்து காபிக்ஷா என்று கேட்க, பட்டரும் தர்க்கபிக்ஷா என்று சொல்ல, திடுக்கிட்டு இவர் பட்டராக வேணும் என்று நிச்சயித்தார். பட்டரும் தம்முடைய மாறு வேஷத்தோடு இருந்த கமண்டலம் கல்லை காவி வேஷ்டி ஆகியவற்றை சுருட்டி எறிந்து மகா வேகமாக உபன்யஸித்தார்.

வேதாந்தியும் இவருடைய வித்யா மாஹாத்ம்யம் காண இவரோடே தர்க்கிக்க, ஒன்பது நாள் சென்ற பின்பு, பத்தாம் நாள் பட்டர் விசிஷ்டாத்வைத பரமாக உபன்யஸித்தார். இதைக்கண்ட வேதாந்தி நடுநடுங்கிப் போய் எழுந்திருந்து தேவரீர் மநுஷ்யமாத்ரமே என்று இருந்தேன். நம்பெருமாளென்ன நீரென்ன பேதம் இல்லை, உறங்கும் பெருமாள் அவர். நீர் உலாவும் பெருமாள் ஆன பின்பு வார்த்தை சொல்லக்கூடாது என்று பட்டர் திருவடிகளிலே விழுந்து ஸேவித்தார். பட்டரும் திருவுள்ளம் உகந்தருளி வேதாந்தியை அங்கீகரித்தார். பிற்காலத்தில் அவரே பட்டருடைய சீடராய் நஞ்சீயர் என்ற பெயரினைப்பெற்றார். திருநெடுந்தாண்டைப் பொருள் செப்பினதால் உண்டான பரிசு. அப்படிப்பட்ட பட்டரை வாழ்த்துவோமாக.

*(அன்ன வயல் பூதூரன் அடிபணிந்தோன் வாழியே)* அன்னம், ஸாரஸம் ஆகிய பக்ஷிகள் மிளிர்கிற அநந்த ஸரஸ் தீர்த்தமும் வயலையும் உடையது பூதூர் என்னும் பூதநகரம் அல்லது பூதபுரி ஆகும். இங்கு அவதரித்தவர் இராமாநுசர். அவரே பூதூரனாவர். அவர் அடி பணிந்தவர் பட்டர். ஆழ்வானுக்கு நம்பெருமாள் அருளால் பிறந்த பிள்ளைக்குத் திருநாமங்கள் சாத்துகை தொடக்கமானவற்றுக்கு எம்பெருமானாரே கடவர் என்றும், தமக்கு அதில் ஒருவிதத்திலும் அந்வயம் இல்லை என்றும் ஆழ்வான் வெறுமனே இருக்க, எம்பெருமானார் ஆழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளி, எம்பாரை அழைத்து அந்த குழந்தைகளை எடுத்து வரச்சொல்ல, எம்பாரும் இரு கையிலும் ஏந்திக்கொண்டு த்ருஷ்டி தோஷம் தாங்காமலிருக்க த்வயத்தை (த்வய மந்த்ரமாவது *"ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:"*) காப்பாக அநுஸந்தித்துக் கொண்டு வந்தார். எம்பெருமானார் சந்தோஷத்தின் மிகுதியாலே தண்தாமரைக் கண்களாலே கடாக்ஷித்து, குழந்தைகளுடைய ஒளியைக் கண்டு எம்பாரே இந்த குழந்தைகள் மேலே த்வயம் பரிமளிக்கிறதே. நீர் என் செய்தீர் என்று கேட்டார். அவர்களுக்கு காப்பாக த்வயம் அநுஸந்தித்து வந்தேன். வேறு ஒன்றும் அறியேன் என்றார். அவர்களுடைய உஜ்ஜீவனத்துக்கு எம்பாரை நியமித்து, பஞ்சாயுத திருவாபரணமும் சாத்தி, எம்பாரைக் கொண்டு நாமகரணம், திருவிலச்சினை செய்வித்தார். முதலில் பிறந்த பிள்ளைக்கு ஸ்ரீபராசர பகவான் என்ற திருநாமத்தைச் சாற்றினார். ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் பூர்வ சதகத்தில் (3) *"ராமாநுஜ முநிர் ஜீயாத்...."* என்ற சுலோகம் மூலமாக எம்பெருமானாருக்குப் பல்லாண்டு பாடுகிறார். அத்தகைய பூதூரன் அடிபணிந்தோன் வாழியே என்றபடி.

*(அநவரதம் எம்பாருக்கு ஆட்செய்வோன் வாழியே)* எம்பார் என்றதன் பெயர்க்காரணமாவது கோவிந்தரான எம்பார் முக்கோல் பகவரான பிறகு அந்த புதிய துறவிக்கு எம்பெருமானார் என்று இராமாநுசர் தமது பெயரையே சூட்டினார். ஆனால் பெயரைப் பற்ற கோவிந்தர், எம்பெருமானார் என்ற இத்திருநாமம் அடியேனால் சுமக்க முடியாது. ஸ்வாமிக்கு நிழலும் அடிதாறுமாயும் உள்ளவனுக்குப் பொறுக்கும்படி பெயரிட வேண்டும் என்றார். இராமாநுசரும் அத்திருநாமத்தை ஒருவாறு சுருக்கி எம்பார் என்ற திருப்பெயரைச் சூட்டினார் என்று பெரியோர் பகர்வர். எம்பாரும் பட்டரைத் தன் சிறகின் கீழ்க் கொண்டு தாமறிந்தவை எல்லாம் பட்டருக்குச் சொல்லி வைத்தார். எம்பார் ஆசார்யரானமை தோற்ற பட்டரும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்துக்கு வ்யாக்யனம் செய்யும்போது ஆசார்ய வணக்கத்தைத் தெரிவிக்கும் வகையில் *"வந்தே கோவிந்த"* என்று அருளியது காண்க. *"பட்டார்யாய ப்ரபத்திம்...."* என்கிறபடியே எம்பெருமானாருடைய கட்டளையாலே "பட்டருக்கு ப்ரபத்தி சாஸ்த்ரத்தையும், ஒப்பற்ற திருவாய்மொழியின் பொருளையும், ஸ்ரீபாஷ்யம் முதலான மற்ற க்ரந்தங்களையும் மற்றும் ரஹஸ்யங்களையும் எந்த ஆசார்யர் உபதேசித்தருளினாரோ, எந்த பேராசிரியர்

லட்டு பிரசாதம் தரிசனத்திற்கு வந்தவர்களுக்கு (டிக்கெட் ஸ்கேன் செய்யப்பட்டவர்கள்) மட்டுமே இலவசமாக வழங்கப்படும். தரிசனத்திற்கு வர இயலாதவர்களுக்கு வழங்கப்படமாட்டாது. பக்தர்கள் தாங்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் பிரசாதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

யதிராஜருடைய திருவடி நிழலாகத் திகழ்கிறாரோ, எம் குலகுருவும் அளவற்ற ஞானவைராக்யங்களையும் உடையவருமான அந்த கோவிந்தபட்டர் என்னும் எம்பாரை வணங்குகிறேன்'' என்றும் எம்பார் பெருமை சொல்லப்பட்டுள்ளது. இதுபற்றியே அனவரதம் எம்பாருக்கு ஆட்செய்வோன் வாழியே என்றும், பட்டர் தொழும் எம்பார் என்றும் வழங்கப்பட்டது.

(மன்னு திருக்கூரனார் வளமுரைப்போன் வாழியே) கூரம் என்னும் திருத்தலமானது காஞ்சீபுரத்துக்கு 10 கி.மீ. அருகாமையில் உள்ளது. இது தான் தேவப்பெருமாள் ஸம்பந்தமும் ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்த இராமாநுசரின் ஸம்பந்தமும் நிலை பெற்றமையாலே திருக்கூரம் எனப்பட்டது. அங்கு அவதரித்தவர் திருக்கூரனாரான கூரத்தாழ்வான். வளம் – பெருமை. கூரத்தாழ்வானுக்குப் பெருமை ஆவது முக்குறும்பை அறுத்தவர். அதுமட்டுமின்றி ராமாநுசருக்கு ஜலபவித்ர ஸ்தானமாய் இருப்பவர். நஞ்சீயர் பட்டர் விஷயமாக தனியன் அருளியபோது அதில் *''ஸ்ரீவத்ஸாங்க ஸுத:''* என்று உரைப்பர். ஸ்ரீ:வத்ஸாங்க: என்பது எம்பெருமானுடைய திருநாமம். ராஜகுமாரன் என்றாப்போல. அதுவே கூரத்தாழ்வானுக்கு திருநாமமாயிற்று. எனவே எம்பெருமானுடைய திருக்குமாரர் என்றும், கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர் என்றும் இரு பொருள்கள் கொண்டது. அத்தகைய பெருமை பொருந்திய கூரத்தாழ்வானின் பெருமையை பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் போற்றுகிறார். பிறவியாலும் கல்வியினாலும் தமக்கு ஆழ்வான் குருவானது பற்றி ஆழ்வானைக் கொண்டாடுகிறார் முதலில் இங்கு. *''யத் உக்தய: த்ரயீகண்டே மங்கலஸுத்ரம்''* என்கிறபடியே வேதத்துக்கு தாலி போன்ற திவ்யஸுக்திகளை அருளிச்செய்கையாலே ஆழ்வானையே நாம் எப்போதும் வணங்குவோம் என்றவாறு. பிற மதங்களை நிரஸித்துப் பரதத்வநிர்ணயம் பண்ணவல்ல வாக் வைபவத்தை உடையவர் ஆழ்வான். *''ஸ்ரீவத்ஸசிஹ்ந மிச்ரேப்ய:''* என்பது எம்பெருமானுடைய திருநாமம். திருவறுமார்பன் என்பது தமிழ்ப்பெயர். மிச்ர என்பது பூஜ்யவாசகம் என்பர். ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் *''ஜாதோ லக்ஷ்மணமிசர ஸம்சரய தநாத் ஸ்ரீவத்ஸ சிஹ்நாத் ருஷே:''* என்கிறபடியே எம்பெருமானை அடைதலாகிய செல்வம் படைத்த ஆழ்வான் என்ற ருஷியின் குமாரன் என்று தம்மைப்பற்றிச் சொன்னது காண்க. இதனால் கூரத்தாழ்வானின் வளம் உரைத்தலாயிற்று. அத்தகைய பட்டரை வாழ்த்துவோமாக.

*பட்டர் வாழித்திருநாம உரை தொடரும்...*

## குறுக்கெழுத்துப் புதிர் விடை -124

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ள் | ளி | 2 கொ | ண் | டா | தி | நி | மா | 4 த | த் | 6 வை |
| ன் | | 8 க | ண் | ண | ன் | | | | ர | | த் |
| னி | ணி | பா | ட | ண் | 9 த | | | | ணி | | ய |
| ரு | 10 ஆ | ட | ல் | | 11 தி | ரு | வோ | ண | ம் | ணை | 12 வீ |
| 13 ஆ | ழ் | 14 வா | ர் | 15 தி | ரு | ந | க | ரி | | ம் | ர |
| ழ் | நி | ர | 16 பா | ரு | வி | ம் | க | ங் | 17 ர | ல | ரா |
| வா | லை | ண | ற் | 18 வா | ட | | ணு | ஷ் | 19 வி | பி | க |
| ர் | னி | ம் | ர | தி | ந் | 20 ம | ம் | ல | கு | 21 கோ | வ |
| க | லி | 22 ஆ | நி | ரை | தை | ம் | ல | 23 ந | ல | 24 அ | ன் |
| ள் | 3 ஆ | யி | ர | ம் | தோ | ள் | ப | ர | ப் | பி | |
| ணி | பா | ர | க் | 5 ச | ங் | க | ர | நா | ரா | ய | ண |
| | | ம் | | 7 பூ | வி | ரு | ந் | த | வ | ல் | லி |



# ஆரோக்கியம் அருளிடும் ஸ்ரீ தன்வந்திரி

*நமாமி தன்வந்திரிம் ஆதி தேவம் ஸுராஸுரைர் வந்தித பாதபத்மம் ।*
*லோகே ஜரா ருக் பய ம்ருத்யு நாசம் தாதாரமீசம் விவிதௌஷதீனாம் ।।*

தேவர்களாலும் அசுரர்களாலும் வணங்கப்படும் தாமரை போன்ற திருவடிகளைக் கொண்டவரே, ஆதிதேவனாகிய தன்வந்திரி பகவானே, உங்களை நான் வணங்குகிறேன். உலக மக்கள் எதிர் கொள்ளும் முதுமை, நோய், பயம் மற்றும் மரணம் ஆகியவற்றை நீக்குபவரும், அனைத்து வகையான மூலிகைகள் மற்றும் மருந்துகளின் அதிபதியும் ஆகிய உங்களை நான் சரணடைகிறேன். ஐப்பசி மாதம் வந்தாலே தீபாவளி பண்டிகையை எதிர்நோக்கி இருக்கும் நம் அனைவருக்கும் தீபாவளி லேகியம் கூட நினைவிற்கு வரும். "லேகியம், பூர்ணம், அரிஷ்டம், கஷாயம்" என்றாலே ஆயுர்வேதம் என்று சின்ன குழந்தைகள் கூட சொல்லி விடுவார்கள். அப்படிப்பட்ட உயரிய ஆயுர்வேத மருத்துவம் நமக்கு எப்படி கிடைத்தது என்று பார்ப்போம்.

ஒரு சமயம் தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் வேண்டி பாற்கடலை கடைந்தார்கள். பாற்கடலுக்குள் இருந்து ஆலகால விஷம், காமதேனு, உச்சைச்சிரவம், ஐராவதம், கௌஸ்துபமணி, கற்பக விருட்சம் போன்றவை ஒவ்வொன்றாக வந்தது. அதன் தொடர்ச்சியாக பகவான் ஸ்ரீதன்வந்திரி, சதுர்புஜங்களில் சங்கு, சக்கரம், அமிர்த கலசம் ஏந்தி அவதாரம் செய்தார்.

ஸ்ரீதன்வந்திரி பகவான் அவதாரம் செய்த நன்னாளான ஐப்பசி மாதத்தில் வரும் தேய்பிறை திரயோதசி திதி "தன்வந்திரி ஜெயந்தி"யாகக் கொண்டாடுகிறோம். மகாவிஷ்ணுவின் அம்சமான தன்வந்திரி ஆரோக்கியத்தின் கடவுள் ஆவார். இவரை வணங்கினால் நோய்கள் நீங்கும், ஆயுள் விருத்தியடைந்து மனபயம் நீங்கும்.

பகவான் ஸ்ரீ தன்வந்திரி பற்றி ஸ்ரீமத்பாகவத புராணம் (8வது ஸ்கந்தம்) *"த ல்தத: பீதாம்பரதர: தன்வி பீயூஷ கலசம் தத்ல்"* பாற்கடல் கடைதலில் 12வதாகத் தோன்றியவர் தன்வந்திரி என்று கூறுகிறது.

விஷ்ணு புராணம், பிரம்மாண்ட புராணம் காசி மன்னன் தன்வன் என்பவரின் புதல்வனாக தன்வந்திரி அவதரித்து, பரத்வாஜ முனிவரிடம் ஆயுர்வேதம் கற்று உலகிற்கு போதித்தார் என்கிறது. மகாபாரதம் அனுசாசன பர்வத்தில் தன்வந்திரியின் பெருமை பேசப்படுகிறது.

சில உபநிஷதங்களில் வைத்தியத்தின் அதி தேவதையாக விஷ்ணு வடிவமாகக் குறிப்பிடப் படுகிறார். *"ஔஷதம் ஜாஹ்நவீ தோயம் வைத்யோ நாராயணோ ஹரி:"*என்பது வேத வாக்கு.

ஆயுர்வேதம் என்ற அற்பு ஞானமானது மனிதர்களால் உருவாக்கப்பட்டது அல்ல. "அபௌருஷேயம்".

முதலில் பிரம்மா அறிந்தார். பிரம்மாவிடம் இருந்து தக்ஷ பிரஜாபதியும், அவரிடமிருந்து அஸ்வினி தேவர்களும், அஸ்வினி தேவர்களிடமிருந்து இந்திரனும், இந்திரனிடமிருந்து பரத்வாஜ முனிவர் பூலோகத்திற்குக் கொண்டு வந்தார்

பரத்வாஜ முனிவர் ஆத்ரேயர், சுஸ்ருதர், காஸ்யபர் போன்ற மகரிஷிகளுக்குப் போதித்தார். இதிலிருந்து சரக சம்ஹிதை, சுஸ்ருத சம்ஹிதை, அஷ்டாங்க ஹ்ருதயம் தோன்றியது.

## ஆயுர்வேதத்தின் பெருமை

ஆயுர்வேதம் என்றால் ஆயுளின் வேதம். *''ஸ்வஸ்தஸ்ய ஸ்வாஸ்த்ய ரக்ஷணம் ஆதுரஸ்ய விகார ப்ரசமனம்''* ஆரோக்கியமானவனின் ஆரோக்கியத்தை காப்பது, நோயாளியின் நோயை நீக்குவது. உலகின் முதல் அறுவை சிகிச்சை நிபுணர் சுஸ்ருதர் பிளாஸ்டிக் சர்ஜரி, கண் அறுவை சிகிச்சைகளை 2600 ஆண்டுகளுக்கு முன்பே செய்தவர்.

ஆயுர்வேதம் உடலை மட்டும் அல்ல, மனம், ஆத்மா, பஞ்சபூத சமநிலையை சரி செய்கிறது. ஆயுர்வேதம் வெறும் புத்தகம் அல்ல, நம் புராண இதிகாசங்களில் வாழ்ந்த மருத்துவம் என்பதற்கான சான்றுகள் இதோ!





## மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னப்பிரசாத மையம்

தானத்தில் சிறந்தது அன்னதானம். யாரானாலும் போதும் என்று சொல்லும் ஒரே தானம் அன்னதானம். "அன்னப்பிரசாதம்" எனும் பெயரில் இலவசமாக உணவு அளிப்பதே நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே ஸ்ரீவேங்கடேஸ்வரா நித்ய அன்னப்பிரசாதம் டிரஸ்ட். உங்களால் முடிந்த அளவிற்கு இந்தத் திட்டத்திற்காக நன்கொடை செலுத்துங்கள். காய்கறிகள் மற்றும் பொருட்கள் அளிப்பதன் வாயிலாகவும் பக்தர்களும் உதவலாம்.

- அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- அன்னப்பிரசாதம் பெறுமிடத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- திருமலையில் கைக்குழந்தைகளுக்கு தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையானவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

## இராமாயண கால சான்றுகள்

சுஷேணர் லட்சுமணனின் நாடியைப் பார்த்து, உயிர் இருக்கிறது, மூலிகையால் காக்கலாம் என்றார். இது ஆயுர்வேத நாடி விஞ்ஞானம் ஆகும்.

லட்சுமணன் மூர்ச்சையான போது, சுஷேணர் இமயமலையில் உள்ள மிருத சஞ்சீவினி, விசல்யகரணி, சுவர்ண கரணி, சந்தானகரணி என்ற நான்கு மூலிகைகளைக் கொண்டு வர சொன்னார். இது சுஸ்ருத சம்ஹிதையில் கூறப்பட்டுள்ள "ஔஷதி வர்க்கம்" தான். அனுமன் கொண்டு வந்தது ஆயுர்வேத அவசர சிகிச்சை.

## நான்கு முக்கிய மூலிகைகள்

மிருத சஞ்சீவனி – மயக்கமடைந்த அல்லது மரண விளிம்பில் உள்ளவரை உயிர்ப்பிப்பது. விஷல்யகரணி – உடலில் பாய்ந்த அம்பு அல்லது ஆயுதங்களை எளிதாக வெளியேற்றி, வலியைக் குறைப்பது. சவர்ண்ய கரணி – காயம்பட்ட தோலை பழைய நிறத்திற்கும் வடிவத்திற்கும் மாற்றுவது. சந்தானகரணி – உடைந்த எலும்புகளையும் சதைகளையும் ஒட்ட வைப்பது (சான்று: யுத்த காண்டம்).

அசோக வனத்தில் சீதா தேவிக்கு இராவணனின் அரண்மனையில் மன அழுத்தம் வராமல் இருக்க, திரிஜடை மூலிகை கஷாயம் கொடுத்ததாக உத்தர ராமாயண குறிப்பு உள்ளது.

## எண்ணெய்த் தோணி

அயோத்தியில் மன்னர் தசரதர் மரணமடைந்த போது, பரதன் கேகய நாட்டில் இருந்து திரும்பி வர சில நாட்கள் ஆனது. தசரதனின் உடல் கெட்டுப் போகாமல் இருக்க, ஆயுர்வேத மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் அவரது உடல் சிறப்பு மூலிகை எண்ணெய்கள்

நிரப்பப்பட்ட தொட்டியில் பதப்படுத்தி வைக்கப் பட்டது. பண்டைய இந்தியாவில் சிதைவைத் தடுக்க தேன் மற்றும் ஆயுர்வேத தைலங்கள் பயன்படுத்தப் பட்டதற்கான மிகச்சிறந்த வரலாற்றுச் சான்று இதுவாகும்.

வால்மீகி ராமாயணம் பால காண்டம் முதல் யுத்த காண்டம் வரை ஆயுர் வேதத்தின் எட்டு பிரிவுக ளான "அஷ்டாங்க ஆயுர்வேதம்" மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் வருகின்றன.

## தினசரி வாழ்க்கை முறை மற்றும் உணவு பழக்கவழக்கங்கள்

ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவமான "தடுப்பு மருத்துவம்" மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை இராமாயண மாந்தர்களிடம் காணப்பட்டது. நீர், உணவு ஆகியவற்றின் தூய்மை மற்றும் "தினசர்யா" போன்ற ஆயுர்வேதக் கோட்பாடு களான சுத்தம் மற்றும் ஒழுக்கத்தை காட்டில் வாழ்ந்த போதும் இராமனும் லட்சுமணனும் தவறாமல் பின்பற்றினர். சீதை இராவணனால் கடத்தப்பட்டு அசோக வனத்தில் அடைக்கப்பட்டிருந்த போது, அவர் அரண்மனை உணவுகளைத் தவிர்த்து, உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைக்க உணவே மருந்து எனும்படி கனி மற்றும் கிழங்கு களை மட்டுமே உட்கொண்டார்.

இராமாயணத்தில் மூலிகைகளின் குறிப்புகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அர்ஜுனா (மருத மரம்), அசோகா, நிம்பா (வேம்பு), குடஜா, துளசி, பிராமி போன்ற ஏராளமான மருத்துவத் தாவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும், காய்ச்சல் மற்றும் மன அமைதிக்கும் பயன்படுத்தப்பட்டன. தாவரங்க ளின் ஆரோக்கியம் மற்றும் விவசாயம் குறித்த "விருட்ச ஆயுர்வேத" முறைகளும் அக்காலத்தில் வழக்கிலிருந்தன.

## தற்கால அறிவியல் சான்றுகள்

இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "துரோணகிரி" மற்றும் இலங்கையின் "ருமாசலா" போன்ற மலைப்பகுதிகளில் இன்றும் அரிதான மருத்துவ மூலிகைகள் (சஞ்சீவனி வேர்) கண்டறியப்






பட்டு, நவீன மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை வேந்தன் இராவணன் ஒரு சிறந்த ஆயுர்வேத அறிஞர் என்று கூறப்படுகிறது. அவரே "அர்க்க பிரகாசம்" போன்ற பல ஆயுர்வேத மற்றும் நாடி சாஸ்திர நூல்களை எழுதியதாக பாரம்பரிய வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

## பாகவத புராணச் சான்றுகள்

வீரபத்ரரால் தக்ஷன் தலை அறுபட்ட போது, அஸ்வினி தேவர்கள் ஆட்டின் தலையை வைத்து முதல் "பிளாஷ்டிக் சர்ஜரி" செய்தனர். இது சுஸ்ருத ரின் சல்ய தந்திரத்திற்கு மூலம் ஆகும். அசுரர்கள் இறந்தால் கூட சுக்ராச்சாரியார் மிருதசஞ்சீவினி மந்திரத்துடன் மூலிகை சேர்த்து உயிர்ப்பித்தார். இது ஆயுர்வேத சித்த மருத்துவம்.

சரக சம்ஹிதை கூறும் நேரடி சான்று சரகரே கூறுகிறார்: புராதன காலத்தில் இந்திரன் ஆயுர் வேதத்தை பரத்வாஜருக்கு உபதேசித்தான், ஏனெனில் மனிதர்கள் நோயால் துன்பப்பட்டனர். மகாபாரதக் காலத்தில் ஆயுர்வேத மருத்துவமுறை மிகவும் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தது. இதிகாசத்தின் பல்வேறு கட்டங்களில், குறிப்பாக போர்க்களங்கள், அரசவைகள் மற்றும் முனிவர்க

ளின் ஆசிரமங்கள் ஆகிய இடங்களில் ஆயுர்வேதத் தின் பயன்பாடுகள் பரவலாகக் காணப்பட்டன.

மகாபாரதத்தின் பீஷ்ம பர்வம் மற்றும் துரோண பர்வத்தில், அம்பு தைத்த வீரர்களின் உடலிலிருந்து அம்புகளை அகற்றுவதற்கும், இரத்தப் போக்கை நிறுத்துவதற்கும், காயங்களைக் குணப்படுத்துவதற் கும் கைகூர்ந்த ஆயுர்வேத மருத்துவர்கள் போர்க் களத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசர்கள் மற்றும் அரச குடும்பத்தினரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைக் கண்காணிக்க தகுதி வாய்ந்த தலைமை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர் (சான்று: சபா பர்வம்). நாரத முனிவர் தர்மரை சந்திக்க வரும்போது, "உமது அரசவை வைத்தியர்கள் ஆயுர்வேதத்தின் எட்டு பிரிவுகளிலும் (அஷ்டாங்க ஆயுர்வேதம்) தகுதி வாய்ந்தவர்களாக இருக்கிறார்களா? உங்களுக்குச் சரியான உணவு மற்றும் மருத்துவ வழிகாட்டுதல்கள் கிடைக்கிறதா?" என்று நலம் விசாரிப்பதாக ஒரு குறிப்பு வருகிறது.

பாம்புக் கடி மற்றும் விஷம் தொடர்பான ஆபத்துகளுக்கு மகாபாரதக் காலத்தில் ஆயுர் வேதத்தின் நச்சுயியல் பிரிவு பயன்படுத்தப்பட்டது (சான்று: ஆதி பர்வம்). தக்ஷகன் என்ற நாகம் தீண்டியதால் பரிட்சித்து மகாராஜா மரணமடைவார் என்ற சாபம் ஏற்பட்டபோது, விஷ முறிவு நிபுணரான காசியப முனிவர் ஆயுர்வேத மூலிகை மருத்துவத் தின் மூலம் தக்ஷகனின் நஞ்சை முறிக்க முற்பட்டதாகக் கதைப் பகுதி விவரிக்கிறது.

உடலுக்கும் மனதுக்கும் உள்ள தொடர்பை விளக்கும் ஆயுர்வேதக் கோட்பாடுகள் மகாபாரதத் தில் கையாளப்பட்டுள்ளன. மனிதனின் உடலில் ஏற்படும் நோய்களுக்கும், அவனது மனதில் எழும் முக்குணங்களுக்கும் (சத்வ, ராஜஸ, தாமஸ) உள்ள தொடர்பு சாந்தி பர்வத்தில் விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளது. மனக் கவலைகளால் ஏற்படும் உடல் உபாதைகளைத் தீர்க்கும் மனநல ஆலோசனை களும் வாழ்வியல் நெறிமுறைகளும் இதில் கூறப் பட்டுள்ளன.

கரு உருவாக்கம் மற்றும் பிரசவ கால பராமரிப் புகள் ஆயுர்வேத முறைப்படி மேற்கொள்ளப் பட்டன. சான்று: காந்தாரிக்கு நீண்ட காலம் மகப்பேறு தள்ளிப்போன போதும், பின்னர் நூறு கௌரவர்கள் பிறந்த நிகழ்விலும் அக்காலத்துக் "கருவள மேம்பாட்டு" மற்றும் "மூலிகை திரவக் குடுவை பராமரிப்பு" போன்ற பழங்கால உயிரி–தொழில்நுட்ப முறைகள் (ஆயுர்வேதத்தின் துணையோடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.

மகாபாரதத்தில் வரும் இந்தச் சான்றுகள் அனைத்தும், தொடர் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திலேயே இந்தியாவில் ஆயுர்வேதம் ஒரு முழுமையான மருத்துவக் கலையாகவும், அறிவியல் ரீதியாகவும் மக்களிடையே புழக்கத்தில் இருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

**தொல்லியல் சான்று**

மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் கிடைத்த துளசி, வேம்பு, மஞ்சள் விதைகள். தக்ஷிசீலா பல்கலைக் கழகத்தில் 10,000 மாணவர்களுக்கு ஆயுர்வேதம் போதிக்கப்பட்டது. சாணக்கியர் காலம் நாலந்தா நூலகத்தில் 1000க்கும் மேற்பட்ட ஆயுர்வேத ஓலைச் சுவடிகள் இருந்தன. இதிலிருந்து ஆயுர்வேதம் கதை அல்ல, நம் முன்னோர்கள் வாழ்ந்த அறிவியல்.

நம் பாரதத்தின் 5000 வருட பொக்கிஷம் நம் ஆயுர்வேத மருத்துவம். பகவான் ஸ்ரீமந்நாராயண னின் அவதாரமான தன்வந்திரியின் அனுகிரகத்தி னால் ஒவ்வொரு இலையும், வெறும் காய்கனிக ளும், கனிமங்களும், லோகங்களும் மருத்துவ குணம் மேலோங்கி மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், மிருகங்களுக்கும் (மிருக ஆயுர்வேதம்), வ்ருக்ஷங்க ளுக்கும் (வ்ருக்ஷ ஆயுர்வேதம்) மருந்தாக அமைகிறது.

மேலை நாடுகளோடு ஒப்பிடும்போது பாரதம் வாழும் முறையைக் கற்றுக் கொடுக்கிறது. தினசரி தினசர்யா, ரிதுசர்யா, ஆகாரம், உபவாசம், யோகா, தியானம்–மட்டுமல்லாம் ஆச்சார ரசாயனம் (வாழ்வியல் ஒழுக்கம்) என அனைத்தையும் கற்றுக் கொடுக்கிறது.

ஸ்ரீ தன்வந்திரி பகவான் ஜெயந்தி நன்னாளில் ஸ்ரீ தன்வந்திரி பகவானை வணங்கி ஆரோக்கியத்தை பிரார்த்திப்போமாக!!

**ஆயுர்வேத சிறப்பு மருத்துவர்**
**டாக்டர்.கி.ஜ.நிகிலா வெங்கட்,**
**கோவை, 89409 91234**




ஓர் காட்டில் வேடன் ஒருவன் ஓடைக்கு அருகில் வலை விரித்து வேட்டையாடுவதற்காகக் காத்துக் கொண்டிருந்தான். ஆட்டுக்குட்டி ஒன்று அந்த ஓடையில் ஓரமாக நின்று தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அச்சமயம், தாகத்தைத் தணிப்ப தற்காக புலி ஒன்றும் அந்த ஓடைக்கு வந்தது.

ஆட்டுக்குட்டியைச் சாப்பிட நினைத்த அந்தப் புலி, அதனிடம் வம்பிழுக்க ஏதோ ஒரு காரணத்தைக் கூறியது. "ஆட்டுக்குட்டியே! நீரை ஏன் கலங்கச் செய்கின்றாய்?" என்றது புலி. "இல்லை, இல்லை. நான் நீரைக் கலங்கடிக்க வில்லை" என்று ஆட்டுக் குட்டி கூறியது. "பொய் சொல்லாதே. தண்ணீர் எவ்வாறு கலங்கியுள்ளது என்பதைப் பார்" என்று புலி உறுமியது.

"நீங்கள் ஓடையின் நீரோட்டத்தின் மேலே இருக்கின்றீர். நீங்கள் பருகிய நீரைத்தான் நான் பருகுகிறேன். நான் எவ்வாறு கலங்கடிக்க முடியும்?" என்று ஆட்டுக்குட்டி பதிலளித்தது. "என்னால் சுத்தமான நீரை அருந்த முடியவில்லை. நீயே அதற்கு காரணம்!" என்று புலி வேண்டுமென்றே ஆட்டுக் குட்டியிடம் வம்பிழுத்தது. "நான் ஒரு சிறிய விலங்கு. நீரை மேலாகத்தான் பருகினேன். ஓடையில் எனது கால்கூட படவில்லை. ஏன் வீண்பழி சுமத்துகிறாய்?" என்றது ஆட்டுக்குட்டி. "என்னிடமே வாதிடுகிறாயா? நான் யார் என்பதைக் காட்டுகிறேன் பார்" என்று கூறிய புலி ஆட்டுக் குட்டியைக் கொன்று தின்றது.

ஆனால் சிறிது நேரத்தில், அந்த புலியானது வேடன் விரித்த வலையில் சிக்கி வேட்டையாடப் பட்டது. வலியோர்கள் எப்போதும் தங்களது செயல்க ளுக்கு ஏதேனும் ஒரு சாக்குபோக்கு கண்டுபிடித்து, எளியோர்களைத் தாக்க முயல்கின்றனர். எளியோர்கள் கூறும் சரியான காரணங்களை அவர்கள் ஒருபோதும் கேட்க மாட்டார்கள். ஒருவனுக்குக் கெட்டப் பெயரைக் கொடுத்து அவனை வீழ்த்திவிடுவார்கள். வல்லான் வகுத்ததே சட்டமாக உள்ளது.

அப்பாவி ஆட்டினைக் கொல்ல விரும்பிய புலி அதன்மீது வீண் பழியைச் சுமத்தியது. இல்லாத ஒரு குற்றத்தை இருப்பதாகக் கூறி தன்னை நிலை நாட்டி யது. அதுபோலவே, சில மனிதர்களும் ஏதோ ஒரு கதையைச் சொல்லி, மற்றவர்கள் மீது வீண் பழியினைச் சுமத்தி, தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். மனசாட்சி இன்றி வாழும் அத்தகு மனிதர்கள் இந்தப் புலியைப் போன்றவர்களே. இத்தகைய மனிதர்கள் நிச்சயம் ஒருநாள் இறைவனால் தண்டிக்கப்படுவார்கள்.

நாம் செய்யும் செயல்களுக்கு ஏற்றவாறு நமது கர்மவினையும் அமையும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்!

**திரு. இரா. அருண்குமார்,**
**புதுச்சேரி, 9944802769**

## பக்தர்களின் கவனத்திற்கு...

- "நீரின்றி அமையாது உலகு" என்பார் வள்ளுவர். எனவே திருமலையில் தண்ணீரை வீணாக்காதீர். தண்ணீர் குழாய்களை உபயோகித்த பின்னர் நிறுத்தி விட்டுச் செல்லுங்கள்.
- மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவும். தேவையில்லாத நேரங்களில் மின்சாரத்தை நிறுத்தி வையுங்கள்.



# நவம்பர் 2026 ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.




வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குழந்தைகளால் சந்தோஷம் உண்டு. தொழிலில் வளர்ச்சியும், முன்னேற்றமும் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. தொழில் அலைச்சல் காரணமாகத் தூக்கம் குறையும். பூர்வீகச் சொத்துபிரச்சனை தீரும். உடல் ஆரோக்கியத்திற்குத் தகுந்த மருத்துவம் கிடைக்கும். நல்ல முன்னேற்றமும், யோகமும் கலந்த மாதம் இது




தொழிலில் எதிர்பார்த்த நல்ல முன்னேற்றம் உண்டு. வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியப் பிரச்சனை தீரும். நண்பர்கள், உறவினர்கள் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த தன வருவாய் உண்டு. கடன் வாங்கி சுபச் செலவுகள் செய்வீர். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. திருஷ்டியால் சிறு அளவில் காரியத் தடைகள் உண்டாகும். கடும் முயற்சியினால் முன்னேறும் மாதம் இது.




குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். குழந்தைகளின் ஆரோக்கியம் நன்றாக அமையும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த தன வருவாய் கிடைக்கும். தைரியமாகக் காரியங்களைச் செயலாற்றும் மாதம் இது.




குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். திருமணத் தடைகள் விலகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். குலதெய்வ அருள் உண்டு. நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். தெய்வத்தல யாத்திரையில் நல்ல தரிசனம் கிடைக்கும். பழைய பிரச்சனைகள் தீரும் இனிய மாதம் இது.




தொழிலில், குடும்பத்தில் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். அலைச்சலால் தூக்கம் குறையும். மாதத்தின் முற்பகுதியில் தைரியம் குறையும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் அதிகமாகும். குடும்பத்தினருடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. முடிந்தவரை விவாதத்தைத் தவிர்க்கவும். மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதம் இது.




திருஷ்டி காரணமாக காரியங்கள் தாமதமாகும். தம்பதியரிடையே பிரச்சனைகள் உண்டாகும். செலவுகள் அதிகமாகும். விவாதத்தைத் தவிர்க்கவும். அலைச்சலால் தூக்கம் குறையும். கடன் வாங்குவதை, மற்றவர்களுக்கு ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும். புதிய முயற்சிகளையும், தொழிலில் அகலக்கால் வைப்பதையும் தவிர்க்கவும். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம் இது.




மாதத்தின் பிற்பகுதியில் தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். ஆரோக்கிய குறைபாடுகள் நீங்கும். குடும்பப் பிரச்சனைகள் தீரும். குழந்தைகள் முன்னேறுவார்கள். நண்பர்கள், உறவினர்கள் உதவி கிடைக்கும். சுபச் செலவுகள் அதிகம் ஆகும். நினைத்ததைச் சாதிக்கும் இனிய மாதம் இது.




செலவிற்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். குலதெய்வ அருள் கிடைக்கும். நல்ல ஆரோக்கியம் பெறுவீர். தொழிலில் விஸ்தரிப்பு வேலைகள் செய்யலாம். நண்பர்கள், உறவினர்கள் நன்மை செய்வர். எதிர்பார்த்த பண வசூல் உண்டு. மாதத்தின் பிற்பகுதியில் நல்ல விருத்தி உண்டு. வெளிநாடு யோகம் உண்டு. எதிர்பார்த்த நல்ல பலன்கள் கிடைக்கும் மாதம் இது.




கடந்த சில மாதங்களாக இருந்த அலைச்சல், குடும்பப் பிரச்சனைகள் மற்றும் பகைகள் தீரும். திருமணம் கைகூடும். தாயாரின் ஆரோக்கியத்தில் மட்டும் மிகுந்த அக்கறை தேவை. பழைய வாகனம் வாங்குவதைத் தவிர்க்கவும். தொழிலில் இருந்த சிக்கல்கள் குறையும். கடந்த காலங்கள் செய்த தெய்வப் பிரார்த்தனைகள் இனி நிறைவேறும் மாதம் இது.




ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கடன் வாங்குவதையும், கொடுப்பதையும் தவிர்க்கவும். தொழிலில் தாமதமாக வெற்றி கிடைக்கும். இருக்கும் வேலையை விட்டுவிட்டு வேறு வேலை தேடக் கூடாது. அலைச்சலும், குடும்பத்தில் மருத்துவச் செலவுகளும் அதிகமாகும். தெய்வத்தலங்களில் குறை கூறுவதைத் தவிர்க்கவும். தாமதமாக முன்னேறும் மாதம் இது.





பண விஷயத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. ஆரோக்கிய குறைபாடுகள் நீங்கும். தடைபட்ட திருமணம் இனிதே நடக்கும். தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. எதிர்பார்த்த நல்ல பலன்கள் கிடைக்கும் மாதம் இது.




ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. கடன் கொடுப்பதையும், வாங்குவதையும் தவிர்க்கவும். வேலைப்பளு அதிகமாகும். வேலைக்கு உரிய வருமானம் தாமதமாகக் கிடைக்கும். குழந்தைகள் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. புதிய முயற்சிகளையும், விவாதத்தையும் தவிர்க்கவும். பணம், தொழில் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதம்.




## எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



நான் நம் நாட்டின் தேசியப் பறவை.
முருகப்பெருமானின் வாகனம்.

## முருகன் கையில் உள்ள வேல் குறித்து சில வரிகள்...



முருகப் பெருமானின் திருக்கரத்தில் உள்ள வேலானது பராசக்தியின் வடிவமாகவும், ஞானத்தின் அடையாளமாகவும் திகழ்கிறது. சூரப் பத்மனை அழிக்க அன்னை பார்வதி தேவி தனது சக்தியைக் கொண்டு முருகப் பெருமானுக்கு வழங்கியதே வேலாகும்.

வேலானது சிவ பெருமான் மற்றும் பார்வதி தேவியின் ஆற்றல்களுடன் உருவானது என்று கந்த புராணம் போற்றுகிறது.

வேலினை வணங்குவதால் பயம், எதிர்மறை ஆற்றல்கள், தீவினைகள் விலகிடும். அதோடு கல்வி, தொழிலில் லாபம், திருமணப் பேறும் கிட்டிடும்.

வேலினை வணங்கு!
வினைகளை விலக்கு!

**சிறார்களே, இங்கு திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறும் உத்ஸவங்களில் சில கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வுத்ஸவங்களைக் குறித்து சில வரிகள்...**






**கைசிக துவாதசி :** பஞ்ச பேரங்களில் ஒருவரான ஸ்ரீஉக்ர ஸ்ரீநிவாச மூர்த்தி உபய நாச்சிமார்களுடன் கைசிக துவாதசி அன்று சூரிய உதயத்திற்கு முன்னர் திருமலை திருமாட வீதிகளில் திருவீதி உலா வருவார். அன்று விசேஷமாக அபிஷேக ஆராதனைகள், நைவேத்தியங்கள் நடைபெறும்.



**தீபாவளி ஆஸ்தானம் :** பண்டிகை என்றாலே தீபாவளி தான் எல்லோரின் நினைவிலும் முதலில் வரும். தீபாவளி அன்று திருமலையில் "தீபாவளி ஆஸ்தானம்" நடைபெறும். ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகளின் தலைமையில் பட்டு வஸ்த்திரங்களைக் கொண்டு வந்து மூலமூர்த்திக்கும், உத்ஸவ மூர்த்திகளுக்கும் சமர்ப்பிப்பர்.



**கார்த்திகை தீபோத்ஸவம் :** தமிழ் கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று திருமலையில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவமாகளின் தலைமையில் தீபோத்ஸவம் நடைபெறும். ஆலயத்தில் அனைத்து இடங்களிலும் மண்ணாலான விளக்குகளில் தீபங்கள் ஏற்றி வைப்பர். இதனால் திருமலையே விளக்கொளியில் மிளிரும்.




திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-52



## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. *"என்னானையென்னப்பன் என்னெஞ்சிலுளானே"* எனும் பசுரம் இடம்பெறும் பிரபந்தம்.....
2. பத்ரிநாத் திவ்ய தேசத்தில் அருள்புரியும் தாயாரின் திருநாமம் .....
3. பகவத்கீதையில் கண்ணன் பேசிய சுலோகங்களின் எண்ணிக்கை .....
4. இராமானுஜருக்கு ஜலபவித்ர ஸ்தானமாய் இருந்தவர் .....
5. பூமாதேவியின் அம்சமாக அவதரித்து நரகாசுரனை அழித்தவர் .....
6. "கோவிந்த பட்டர்" என்று அழைக்கப்படுபவர் .....
7. மேல்கோட்டை திருத்தலத்தில் அருள்புரியும் எம்பெருமானின் திருநாமம் .....
8. மனிதப்பிறவியை நீக்கி உய்விப்பவனாக மங்கைமன்னனால் குறிப்பிடப்படுபவர் .....
9. பூதபுரி என்றும் அழைக்கப்படும் தலத்தில் அவதரித்த ஆசாரியர் .....
10. பட்டரை "உலாவும் பெருமாள்" என்று குறிப்பிட்டவர் .....
11. "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே" என்று அருளிச் செய்தவர் .....
12. குழந்தைகளுக்காக "பாப்பா பாட்டு" இயற்றிய தேசியக்கவி .....
13. இலந்தை மரம் தல விருட்சமாக உள்ள வடநாட்டு திவ்யதேசம் .....
14. தயா சதகத்தை அருளிச் செய்த ஆசாரியர் .....
15. "கவிம்லோக திவாகரர்" என்று அழைக்கப்படுபவர் .....



## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.11.2026.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |


## சக்கரத்தைச் சுற்றுங்கள்!




## அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!







## விடைகள்


1) ஐப்பசி, 2) பட்டாசு, 3) நரகாசுரன், 4) எண்ணெய் குளியல் 5) மத்தாப்பு ஜிலேபி, 6) ஜவ்வரிசி ஜவ்வு (முழுங்க)முடியாமல் ஒவ்வொரு, 8) பல்லி விழுந்தால்.



## பாதையைக் கண்டுபிடி

தீபாவளி அன்று அண்ணன் தங்கை இருவரும் பட்டாசுகளை வெடிக்க செல்கின்றனர். அவர்களுக்கு பாதை வகுத்துக் காட்டுங்கள்







## பாதுகாப்பான தீபாவளிக்கு பசுமை பட்டாசுகளை வெடியுங்கள்!



- பெரியோர்களின் மேற்பார்வையிலேயே பட்டாசுகளை வெடிக்கவும்.
- திறந்த வெளியில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்கவும். யார் மீதும் பட்டாசுகளை வீசாதீர்கள்.
- எரிதில் தீப்பிடிக்காத பருத்தி ஆடைகளை அணிந்துக் கொள்ளுங்கள்.
- மணல், தண்ணீரை அருகிலே வைத்துக் கொள்ளுங்கள்.
- அதிக சத்தம் இல்லாத பாதுகாப்பான சிறிய வகை பசுமை பட்டாசுகளை வெடியுங்கள்.
- கையில் வைத்துக்கொண்டு எந்த பட்டாசையும் வெடிக்காதீர்கள். பட்டாசை மீண்டும் மீண்டும் பற்ற வைக்காதீர்கள்.

சித்திரக் கதை

# கலி தோஷம் நீங்கிட!

கதை : கலாரத்னா டாக்டர் கே.ரவிச்சந்திரன்
சித்திரம் : திரு.தும்பலி சிவாஜி.

நாட்டை இழந்து, மனைவி தமயந்தியைப் பிரிந்து காட்டில் தனியாகச் சென்று கொண்டிருந்த நள மகாராஜனுக்கு, காட்டுத்தீ பரவுவது தெரிந்தது.

அத்தீப்பிழம்புகளின் நடுவே ஒரு பெரிய பாம்பு சிக்கிக்கொண்டிருந்தைக் கண்டான்.

ஐயா! காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்!

மகாராஜா! என் உயிரைக் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு எப்போதும் நான் கடமைப்பட்டிருப்பேன். நீங்கள் பத்து வரை எண்ணிக்கொண்டே நடந்து செலல்லுங்கள்.

நளன் "ஏகம், த்வே, த்ரீணி, சத்வாரி" என்று கூறியபடி பத்தாவது அடி எடுத்து வைக்கும் போது 'தச' என்றான்.

உடனே அந்தப் பாம்பு நளனை கடித்தது.

நாகராஜனின் விஷத்தினால் நளன் கருமை நிறமாக மாறிப்போனான்.

நாகேந்திரா! நீ எனக்குச் செய்த உதவி இதுதானா? தீயிலிருந்து உன்னைக் காப்பாற்றியதற்கு இதுவா கைமாறு!

அரசே! நான் கார்கோடகன் எனும் நாகராஜன். நான் எப்பொழுதும் நன்றியை மறப்பவன் அல்ல. உன் கர்ம வினையின் காரணமாக கலியின் தாக்கத்தால் துன்பப் பட்டுக் கொண்டிருக்கிறாய். கலியினால் உனக்கு எவ்விதத் தீங்கும் நேரக் கூடாது என்பதற்காகவே நான் இவ்வாறு செய்தேன்.

நீங்கள் 'தச' என்றீர்கள். அந்தச் சொல்லுக்கு 'பத்து' என்றும், 'தீண்டு' (கடி) என்றும் இரு பொருள்கள் உண்டு. அதனாலேயே உங்களிடம் அனுமதி பெற்றுத் தங்களைத் தீண்டினேன்.

இப்போது என் விஷம் உங்கள் உடலில் பரவியுள்ளது. இதனால் உங்கள் உருவம் மாறிவிட்டது; உங்களை யாராலும் அடையாளம் காண முடியாது. சிறிது காலத்திற்குப் பிறகு, நீங்கள் விரும்பும் போது என்னை நினையுங்கள். என் விஷம் உங்கள் உடலிலிருந்து நீங்கிவிடும். உங்கள் பழைய உருவம் உங்களுக்கு மீண்டும் கிடைக்கும். அதுவரை 'பாகுகன்' என்ற பெயரில் ருதுபர்ணன் என்ற மகாராஜனிடம் தேரோட்டியாகப் பணிபுரியுங்கள்.

பாகுகா! தமயந்திக்கு இரண்டாம் முறை சுயம்வரம் ஏற்பாடாகியுள்ளது, உடனே புறப்படுங்கள் போகலாம்.

அரண்மனையில் தன் குழந்தைகளைக் கண்ட நளனுக்குத் துக்கம் மேலிட்டது.

இதற்கிடையில் தமயந்தி வந்து...

சுவாமி! தங்களை இங்கு வரவழைக்கவே இந்தச் "சுயம்வரம்" என்ற நாடகம்.

நாகராஜா! என் பழைய உருவத்தை எனக்கு மீண்டும் அருளுங்கள்.

கார்கோடகனின் அருளால் நளனுக்குத் தனது பழைய உருவம் மீண்டும் கிடைத்தது.

ஆதலால்தான் கார்கோடகனை நினைத்துத் துதித்தால் எப்போதுமே துன்பங்களும், தோஷங்களும் நீங்கும்.

கர்கோடக நாம சர்போயோ த்ருஷ்டி விஷ உச்யதே|
தஸ்ய சர்பஸ்ய சர்வத்வம் தஸ்மை சர்ப நமோஸ்துதே||

சுபம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

(பெரிய எழுத்துக்களில்) _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம்

☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

### உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :

**0877-2233333**

**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஒ., வரைவோலை, ஐ.பி.ஒ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.








திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவத்தில் சுமார் 295 கலைக்குழுவினர் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி முதன்முறையாக அயல்நாடுகளிலிருந்தும் வந்து கலைச்சேவை செய்தபோது...






SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATEDMONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-10-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.



நமாமி நாராயண பாதபங்கஜம் கரோமி நாராயண பூஜனம் ஸதா।
வதாமி நாராயண நாம நிர்மலம் ஸ்மராமி நாராயண தத்த்வமவ்யயம் ॥